ஞாயிறு வெளியீடு

ஆண்டுச் சந்தா ரூபா 5
தனிப் பிரதி 0—1—3

இலங்கை 10 சதம்
மலாய் நாடு 8 காசு

REGD. No. M. 4642

# திராவிடநாடு

மே தின மலர்

மலர் 5 | காஞ்சிபுரம் 5—5—46 | இதழ் 3

## "இரத்தம் கொதிப்பேறுமுன்பு!"

★

உழைத்தோம்



காடு களைந்தோம்—நல்ல
    கழனிதிருத்தியும் உழவுபுரிந்தும்
நாடுகள் செய்தோம்—அங்கு
    நாற்றிசை வீதிகள் தோற்றவும் செய்தோம்
வீடுகள் கண்டோம்—அங்கு
    வேண்டிய பண்டங்கள் ஈண்டிடச் செய்தோம்
பாடுகள் பட்டோம்—புவி
    பதமுறவே நாங்கள் நிதமும் உழைத்தோம்.

மலையைப் பிளந்தோம்—புவி
    வாழவென்றேகடல் ஆழமும் தூர்த்தோம்
அலைகடல்மீதில்—பல்
    லாயிரங்கப்பல்கள் போய்வரச்செய்தோம்
பல தொல்லையுற்றேம்—யாம்
    பாதாளம் சென்று பசும்பொன் எடுத்தோம்
உலையில் இரும்பை—யாம்
    உருக்கிப்பல் யந்திரம் பெருக்கியுந்தந்தோம்.

ஆடைகள் நெய்தோம்—பெரும்
    ஆற்றைவளைத்து நெல்நாற்றுக்கள் நட்டோம்;
கூடை கலங்கள்—முதல்
    கோபுரம் நற்சுதை வேலைகள் செய்தோம்
கோட்டையைக் காக்க—யாம்
    துடையளித்தோம் நல்லநடையன்கள் செய்தோம்
தேடிய பண்டம்—இந்தச்
    செகத்தில் நிறைந்திட முகத்தெதிர்வைத்தோம்.

கந்தையணிந்தோம்—இரு
    கையை விரித்தெங்கள் மெய்யினைப் போர்த்தோம்.
மொந்தையிற் கூழைப்—பலர்
    மொய்த்துக் குடித்துப்பசித்துக் கிடந்தோம்
சந்தையில் மாடாய்—யாம்
    சந்ததம் தங்கிட வீடுமில்லாமல்
சிந்தை மெலிந்தோம்—எங்கள்
    சேவைக்கெலாம் இது செய்நன்றிதானோ?

மதத்தின் தலைவீர்!—இந்த
    மண்ணை வளைத்துள்ள அண்ணத்தைமாரே!
குதர்க்கம் விளைத்தே—பெருங்
    கொள்ளையடித்திட்ட கோடீசுரர்காள்!
வதக்கிப் பிழிந்தே—சொத்தை
    வடிகட்டி எம்மைத் துடிக்கவிட்டீரே!
நிதியின் பெருக்கம்—விளை
    நிலமுற்றும் உங்கள் வசம் பண்ணிவிட்டீர்.

செப்புதல் கேட்பீர்!—இந்தச்
    செகத்தொழிலாளர்கள் மிகப்பலர் ஆதலின்
சுப்பல்களாக—இனித்
    தொழும்பர்களாக மதித்திடவேண்டாம்!
இப்பொழுதே நீர்—பொது
    இன்பம் விளைந்திட உங்களின் சொத்தை
ஒப்படைப்பீரே—எங்கள்
    உடலில் இரத்தம் கொதிப்பேறுமுன்பே
        (ஒப்படைப்பீரே!)

[பாரதிதாசன்]

உழல்கிறோம்






★ ★ ★ ★

**சக்திக் கேற்ற உழைப்பு ; தேவைக் கேற்ற வசதி**

# ★ ஏழையின் விழா ★

"இந்தவிதமான நவரத்ன கண்டியை நீங்கள் பார்த்திருக்கவே முடியாது. அபூர்வமான வேலைப்பாடு. வெறும் வேலைப்பாடு மட்டுமல்ல, முதல்தரமான ரத்னங்கள்" வெல்வெட் பெட்டியிலிருந்து, நவரத்ன கண்டியை எடுத்துக்காட்டிப் பெருமையுடன்கூறினர் ராஜா ரகுநாதசிங். அவர் பஞ்சாப்வாசியுமல்ல, சீக்கிய வகுப்புமல்ல; தமிழர்தான், ஆனால்பெயர் அவ்விதம் சூட்டப்பட்டிருந்தது. சிங் என்ற சொல் எப்படி அசையோ, அதே போலத்தான் 'ராஜா' என்ற சொல்லும். அவருக்கு ராஜ்யம் எதுவும் கிடையாது. ராஜாங்கத்தின் 'அபிமானம்' இருந்தது, ஆகவே அந்தப் பட்டமும் கிடைத்தது.

நவரத்ன கண்டியைக் கையிலே வாங்கினர் நரசிம்ம ஐயர்—வக்கீல், அவருடைய விரலிலே இருந்த விலையுயர்ந்த வைரமோதிரம், ராஜாவைச் சவாலுக்கு இழுத்தது. 'சோனி'—அதாவது நரசிம்ம ஐயரின் தகப்பனர், தன் மகன் விரலிலே வைர மோதிரம் இருக்குமென்றே, கையால் நவரத்ன கண்டியைத் தொடுவானென்றே நினைத்ததில்லை. எப்படி நினைத்திருக்கமுடியும், மாவிலை சொத்தைச் செம்பிலே செருகிக்கொண்டு, மக்கள நீர் தெளித்துப் பிழைத்துவந்த அந்தப் புரோகிதர்.

"நவரத்னகண்டி, பேஷா இருக்கு" என்றார் வக்கீல். ராஜா சிங், அந்தப் புகழுரையை ரசித்தார், எதையோ மறந்தவர்போல, சரேலென எழுந்தார், அறைவாசற்படி வரையிலேசென்றார்,"டே! சின்னு! சின்னு!". என்று அழைத்தார்.

சின்னு, அதே நேரத்தில் வக்கீலின் மோட்டார் டிரைவர் மோகனத்தின், கோட்டு, விரலில் இருந்த கிளாவர் மோதிரம், கையிலிருந்த வெள்ளி ரிஸ்ட்வாச், காலில் இருந்த கருப்பு பூட்ஸ், இவைகளைக் கண்டு ரசித்துவிட்டு, இவைகளை எல்லாம், எப்படிப் பெறுவது என்று கேட்பதற்குப்பதிலாக,

"ஏங்க! மோட்டார் ஓட்டறதுன்னு ரொம்ப கஷ்டமில்லேங்க?" என்று கேட்டான்.

"ஆமாம்" என்று பதிலுரைத்துக் கொண்டே, பழைய பத்திரிகை ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தான் மோகன் — சினிமாச் செய்தியை.

"ரொம்பக்கஷ்டமானுலுங்கூடச், சாமர்த்தியமும் வேணுமில்லேங்க இதுக்கு?"

"ஆமாம்! இது என்ன, ஏரா, ஏத்தக்கோலா? என்ஜின்! கொஞ்சம் தவறிஞ, என்ன ஆகும்!"

"ரொம்ப நிதானமாத்தான்ஒட்ட வேணும். ஏனுங்க, அப்படித்தானே"

"நிதானமா ஒட்டவேணும்னு, எருமை போலப் போவலாமா? எஜமான் அதற்கு, லஞ் வழாயிரம் போட்டுக் கார் வாங்கணும். வேகமாத்தான் போகணும், ஆனு ஜாக்ரதையாகவும் போகணும். என்னடா இது, நகருது ஆமைபோலன்னு எஜமானரு கேட்கிறுப் போலேயும் வைச்சிக்கப்படாது, டே! கண்மண் தெரியாமே ஓட்டி எங்கேயாவது போய்க் கவிழ்த்துத் தொலைக்கப்போறே, என்று சொல்கிறபடியும் இடம் வைத்துக்கொள்ளக்கூடாது."

"ஆமாங்க, ஆமாம். கஞ்சியிலே, ஒருபொட்டு உப்புக்குறைச்சாலும் பிடிக்கறதில்லே, ஒரு துளி உப்பு அதிகமாகப் போட்டுட்டாலும், குடிக்க ஒப்புவதில்லே."

"ஆமாம்"

அதற்குமேல், உரையாடல் நடக்கவில்லை. ராஜா சிங்கின் உரத்த குரல் கேட்டு உள்ளே ஓடினன், சின்னு. போகும்போது, "கெட்டிக்காரன் அந்தடிரைவர்! நிழலிலே உட்கார்ந்தபடிவேலை;வெல்வெட்டு மெத்தையிலே! கோட்டு, கடியாரம், மோதிரம், எல்லாம் இருக்கு. சாமர்த்தியமாகப் பிழைக்கிறன். நம்மைப்போலவா? நாயாட்டம் உழைச்சியும், கண்டது என்ன? என்று," மனதிலே, புகழ்ந்து கொண்டே சென்றான்.

"முட்டாள்! சுத்தப்பட்டிக்காட்டுப்பய! நம்ம கிளாவர் மோதிரத்தை எப்படி விறைச்சி விறைச்சிப்பார்க்கிறன் பய." டிரைவர் மோகனன், அர்ச்சனை இவ்விதம் இருந்தது.

"டே! இளநீர், பறிச்சுவா!"

"ராஜா சார்! வேண்டாம், எதுக்கு?"

"சும்மா, இரண்டு இளநீர் சாப்பிடுங்கோ. என்ன............"

"ஒஹோ! நான், வைதிகக் குடுக்கை இல்லே, எதுவும் சாப்பிடுவேன், பேதம் கிடையாது. ஆனு, டாக்டர், ரொம்பக் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்,கொக்கோதவிர, வேறு கூடாது என்று. அதுவும் ஒரே வேளைதான்."

"ஏன்,டையாபிடிஸ்உண்டோ?"

"அப்படின்னும் சொல்ல முடியாது. இருக்கலாமோன்னு இலேசா ஒரு சந்தேகம்-சம்சயம். எதற்கும் முன் ஜாக்ரதையாக இருக்கவேணும் பாருங்கோ."

"ஆமாம். நம்ம உடம்பு, ஒரு துளி தவறி நடந்தாலும், கெட்டுவிடும். இந்தச்சின்னன் இருக்கான் பாருங்க சார், வயசு ஐம்பது ஆகுது, இப்பகூடச் சரி, எதைத் தான் கொடுங்க, சாப்பிட்டு, ஒரு ஏப்பம், அவ்வளவுதான், பஸ்மீகரமாயிடுது."

"இந்தப் பயல்களுடைய திரேகம் அப்படிப்பட்டது. நோய் நொடி கிட்டே வராது அவன்களிடம். கொடுத்துவைச்சவான்னு சொல்லணும் ஒருவிதத்திலே. நம்ம டிரைவர் இருக்கான் பாருங்கோ, பயில்வான்போல. பொதுவாக ஒண்ணுசொல்லலாம், என்னமோ ஏழை ஏழைன்னு சொல்றோமே தவிர, அவாளுக்கு இருக்கிற, ஆரோக்யம், வலிவு, சந்தோஷம், நமக்குக் கிடையாது"

"ஆமாம்"

ஏழைகளின் நிலையின் உயர்வு பற்றி, இருவரும் பேசியானதும், விடைபெற்றுக்கொண்டு சென்றார் வக்கீல் நரசிம்மஐயர். மோட்டார், வேகமாகச் சென்றது, ஜில்லா முன்சிப் வீட்டிலே ஒருவிசேஷம், அதற்காக. நவரத்னகண்டி, வக்கீலின் சகதர்மிணி வத்சலாவின் கழுத்திலே, இருந்தது — கண்மூடிக் கொண்டு, அந்தக் கற்பனைக் காட்சியைக் கண்டு ரசித்தார் வக்கீல்.

"இந்த மோட்டார் ஓட்டும் தொழிலே தெரியாவிட்டால், நாமள் உழுவோமோ, ஏத்தம் இறைப்போமோ,தோட்டவேலேயோ, உலைக்கூடமோ, என்னபாடுபடவேண்டிஇருக்குமோ," என்று நினைத்துக் கொண்டே, காரை ஓட்டினன் மோகன். சின்னுவைக்கண்டதால் உண்டான சிந்தனை அது.

ஆனல் "இந்தப்பாவி, காலையில் ஆறுமணிக்கே வந்து ஷெட்டிலே நுழைந்தால்,கடுகடுத்தமுகத்தோடு பார்க்கிறன், அதேபார்வை, இரவு 9 வரையில், ஒவ்வொரு நாளும். மோட்டாருக்குஎன்ஜின்கோளாறு, ரிப்பேர் செய்ய மனம் இருப்பதில்லே, என்ணெய்.என் இவ்வளவு செலவாயிற்று என்று கேள்வி; சம்பளம், மகா அழுத்தமானபேர்வழி, நாற்பதுதான். இதிலே குடும்பம் நடந்து, கோட்டும் பூட்சும் தேட வேண்டும். பிரேக். தொல்லே கொடுத்தபடி இருக்கிறது. ஒய்வு கிடையாது. செ! இது ஒரு பிழைப்பா!" என்று சோகித்தான் மோகன்.

★

அவன் தலையிலே, விறகுச்சுமை, வீட்டைப்பற்றியநினைப்போ, காட்டிலே பட்ட கஷ்டத்தால் உண்டான களைப்போ,விலையைக்குறைத்துப்பேசி வம்பு செய்தவர்களால் நேரிட்டதொல்லையோ, எதனலோ மனக்கலக்கம்., மோட்டார் எதிரே வந்துவிட்டான்.

"ஐயோ"

"அடடா"

"அடபாவமே"

மாறி மாறிக்கூக்குரல். மோட்டார்,கிறிச்சிட்டு நின்றது.மோகன் கண்களிலே நீர்! மோட்டார் சக்கரத்தடியிலே இரத்தம்! அதைவேடலைக்குக்குத்தான் செய்ய வேண்டிய கடைசிவேலை என்று தீர்மானித்து விட்டவன்போல விறகு தலையன் பிணமாகிக்கிடந்தான். கூட்டம். அமளி. போலிஸ்.லாக்கப், வழக்கு, ஐந்துவருஷம்.

புதியமோட்டார்! பொறுமைக் குணமுடைய டிரைவர். வக்கீலுக்குப்புதிய சிநேகிதம். வைரமாலை பரிசோதனை. அவர் வாழ்வு, வழக்கமாகவே நடந்தது.

★

மோட்டார் டிரைவர் மோகன், சிறையிலிருந்து வெளிவந்தான், உடனே, வறுமைச் சிறையில் தள்ளப்பட்டான். முன்பும் வறுமைதான், ஆனல் அது B. வகுப்புச் சிறைபோல,கோட்டுஉண்டு,பூட்சு உண்டு, இந்த முறையோ, C வகுப்புதான். மோகன, சின்னுவானன். ஏழைதான் முன்பும்; இப்போதோ ஏழைஉலகிலேயே,இன்னும்கொஞ்சம் இருண்ட இடம் புகுந்தான்—தள்ளப்பட்டான். இலட்சாதிகாரி, கோடீஸ்வரன், ஜெமீன் தாரன், சீமான், சிற்றரசன், பிரபு, என்று, எப்படிப் பலவிதமான பெயர்கள் உண்டோ, பணம் படைத்தோருக்கு, எப்படி, அந்தப்பெயர்,ஒவ்வோர் நிலையைக்குறிக்கிறதோ அவ்விதமே, ஏழைகளிலும் பல "ரகம்" உண்டு. பல்வேறு விதமான பெயர்கள் உண்டு. ஏழை, பராரி,பஞ்சை, அனதை, அன்னக்காவடி, இல்லாதவன், வறண்ட தலையன், தரித்திரன், என்று பலஉண்டு பெயர்கள்; நிலையும் பலப்பல.

★

நாய்கள் குலைக்கின்றன! நடு வீதியிலே சென்றால் ..வண்டித் தொல்லே; பாதை ஓரம்போனலோ பாதசாரியின் மிரட்டல்; பாஷையோ, பலர் அறியாதது, ஆடையோ அழுக்குக்குவியல்; இந்நிலையில்வருகிறனே, குருவிக்காரன், வில்லி, முதலிய கூட்டத்தைச்சார்ந்தவன். அவன் ஏழை, ஆனல், தன் ஏழ்மையைப்பற்றிய நினைப்பேகூட அற்றவன். அவன், அண்ணாந்து பார்ப்பான் ஒருமாடிவீட்டை; ஆனல் அந்த அரைவிநாடிநேரம்கூட "ஆலமரத்து அடியிலே நாம், அழகான மாடியிலே இவர்கள்! ஏன்?"என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றுவதில்லே; அவன் ஏழை! அந்தக்கவனம்கூட இருப்பதில்லை. உண்கிறன் கிடைத்தால் — கேட்கிறன் முடியுமானல்—படுக்கிறன்,யாரும் துரத்தாத இடம் பார்த்து—தூங்குகிறன்—விழிக்கிறன் — உழைக்கிறன், பணித்தால், உழைப்புக்கு வாய்ப்புக்கிடைத்தால்;உழல்கிறன், ஏன் என்ற விசாரணையின்றி.ஏழை. ஆனல், அவனுக்கு அந்த எண்ணமும் தோன்றுவது கிடையாது. வேதாந்திகள், தங்களிடம்செல்வம் இல்லேயே என்பதுபற்றிக் கவலையற்று இருக்கிறர்களே அதுபோல் அல்ல, இந்த ஏழை. இவனுக்கு, தானேர் ஏழை என்பதுபற்றிஎண்ணிப்பார்க்க நேரம் இல்லை—நினைப்பு அந்தப்பயிற்சி பெறவில்லை.


★

கைவண்டி வலிக்கும் காத்தானுக்குத் தானேர் ஏழை என்பது தெரியும்—அதனல் தொல்லைநிறைந்த வாழ்விலே சிக்கினேம் என்பதும் தெரியும். தெரிந்து என்ன பலன்? "நாம் ஏழை! என்ன செய்வது? ஏழை, ஏழைதான்!"—இவ்வளவே அவனுக்குத்தெரியும். இதற்குமேல் சிந்திக்க மறுக்கிறன் — முடியாததால்; ஒவ்வோர் பழம் ஒவ்வோர் வகையான சுவை கொண்டிருக்கிறது,மா,ஏன் பலாப்போல் இல்லை, பலாவில் ஏன் 'ஆரஞ்சி ரசம் வரவில்லை' என்று ஆராய்வார்களா; அதுபோலத்தான் கைவண்டிவலிக்கும் காத்தான்!ஏழைதான்,ஆமாம், அதற்காக என்ன செய்வது ஏழையாக இருக்கவேண்டியதுதான். கருப்புநிற உடல் சிலருக்கு; சிலர் சிகப்பு; கருப்பன், வேறு நிறம் அடைய வேண்டுமென்று ஏன் எண்ணப்போகிறன்! காத்தானும் அப்படித்தான்; அவன் ஏழை,அது அவனுக்குத்தெரியும், ஆனல் அது

(7-ம் பக்கம் பார்க்க)


உறையூர்

## எஸ். எம். எஸ். ஆர். பி.



சொந்தக் கைத்தறி கலர்புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்க வஸ்திரங்கள்.

100, 80-நெ. நூலில் தயார் செய்யப்பட்டது. உத்திரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34, பஞ்சவர்ணஸ்வாமிகோவில் தெரு,
உறையூர் P. O. திருச்சி.

## குறிப்புகள்

ஜார் ஆட்சி, பிரபுக்கள், புரோகிதர்கள், படித்து விட்டுப் பிரபுக்களின் பின்னேடும் ஆட்களாக இருந்தவர்கள் ஆகியோருடன் மட்டுமல்ல; பாட்டாளி இயக்கத்தைப் பயங்கர இயக்கமாக்கித், தனிப்பட்டவர்களைப் படுகொலை செய்து வீராதிவீரர்என்று புகழப்பட்டுத், தொழிலாளர் நலனுக்கே ஊறுதேடிய தவருன பாதையிலே சென்ற தீவிர வாதிகளுடனும், லெனின், போராடவேண்டி இருந்தது. தொழிலாளர் இயக்கம், தொழிலாளர் நலன் சம்பந்தப்பட்ட பொருளாதாரப் பிரச்னைகளை மட்டுமே கவனிக்கவேண்டும், பொதுவான அரசியல் பிரச்னைகளை வேறுகட்சி கவனிக்கவேண்டும் என்று பேசிக்கொண்டு ஒரு கூட்டம், லெனினுக்குத் தொல்லை கொடுத்தது. "எகானமிஸ்ட்" என்ற இந்தக் கூட்டத்தையும் லெனின் எதிர்த்து ஒழித்தார்.

●

ரஷியாவிலே பாட்டாளி மக்களின் நிலைமையைப் பற்றிப் பிரபுக்களோ புரோகிதர்களோ கவலை எடுத்துக்கொள்ளவில்லை. உழைப்பாளிகளுக்கே கூடத் தங்கள் நிலைமை திருந்தமுடியும் என்ற எண்ணமே தோன்றவில்லை. மனம் வறண்டு கிடந்தது. ஆகவே லெனின் முதலில் அவர்கள் மனதை வளமாக்கத் தொடங்கினார். புரட்சி மூண்ட சமயம் ரஷியாவில், ஜனத்தொகையில் ஆறில் ஐந்துபங்கு விவசாயிகள். ஆறில் ஒரு பங்குமட்டுமே, ஆலைமுதலிய ஸ்தாபனங்களில் இருந்த தொழிலாளர்கள்; அதாவது பெரிதும் உழவர் நாடாகவே ரஷியா இருந்தது.

●

நார்வேயில்,கடந்த 25ஆண்டுகளாகப், பள்ளிக்கூட மாணவர்களுக்கு இலவசச் சாப்பாடு. சர்க்காரால் தரப்பட்டு வருகிறது ஏழைகளுக்கு மட்டும் என்பதல்ல, யாருக்கும் தரப்படுகிறது.

●

பிரிட்டிஷ் மக்கள் வறுமையால் பீடிக்கப்படாமலும், வேலையில்லாக் கவலைக்கும், வியாதி, விபத்து இவைகளால் வரும் கவலைக்கும் ஆளாகாமலும் தங்கள் வாழ்நாளைக் கழிப்பதற்கான உறுதியான சட்டதிட்ட அமைப்பைப் பிரிட்டிஷ் சர்க்கார் உருவாக்கிவருகிறார்கள்.

இந்த நோக்கத்துடன் நான்கு பிரதான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சமீபத்தில் ஐந்தாவது சட்டமும் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

●

தொழிலாளர்நிலைபற்றிய சகலஅம்சங்களையுங்குறித்து 35 அறிக்கைகள் 1944 பிப்ரவரி12ல் இந்தியசர்க்கார் நியமித்த தொழிலாளர்நிலை விசாரணைக்கமிட்டியாரால்தயாரிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி கமிட்டியில் பி. டி. வி. ரெஜி, ஐ. சி. எஸ். தலைவராகவும் பி.எஸ்.ஆர்.தேஷ்பண்டே, டாக்டர் அஹ்மத் முகதார், பேராசிரியர் பி. பி. அதர்க்கார் ஆகியோர் அங்கத்தினர்களாகவும் உள்ளனர் மேற்படி அறிக்கைகளுள்இருபது அறிக்கைகளைத் தொழிலாளர் இலாகா அங்கத்தினரான டாக்டர் பி. ஆர். அம்பேத்கார்மத்திய சட்டசபை முன்னர் ஏப்ரல் 9உ அன்று சமர்ப்பித்தார்.

கமிட்டி திரட்டிய அடிப்படைத் தகவல்கள் தெரிந்தெடுத்த 38 தொழில் துறைகள் சம்பந்தமாய்ச், சம்பளங்கள், வேலை, குடியிருப்பு வசதி, சமுதாய வாழ்க்கை நிலைஆகியவைபற்றியிருந்தன. அதொழில் துறைகளாவன:— சுரங்கவேலை, நிலக்கரி, மாங்கனீஸ், தங்கம், அப்ரகம், கனிபிரும்பு, உப்பு. தோட்டவேலை: தேயிலை,காப்பி ரப்பர்.தொழிற்சாலைகள்: பருத்தி, சணல், பட்டு, கம்பளி, கம்பளநெசவு, கனிஎண்ணெய்கள், ரேவுத்துறைவேலை, எஞ்சினீரிங், சிமிட்டி, நெருப்புக்குச்சி, காகிதம், கயிற்றுப்பாய், தோல்பதனிடுவது தோல்சாதனங்கள் தயாரிப்பது, மண்பாண்டவேலை, அச்சியந்திர சாலைகள், கண்ணாடி, ரசாயனமருந்துச் சாக்குத்தயாரிப்பு, அவலக்கு பீடிசுற்றுதல், அப்ரகம் பெயர்ப்பு, சர்க்கரை, பஞ்சுஅரைத்தல்,சிப்பங்கட்டுதல், அரிசி ஆலைகள். போக்குவரத்து: டிராம்வே, பஸ், இதரவகைகள்: துறைமுகத் தொழிலாளர், நகரசபைத்தொழிலாளர், மத்திய மாராமத்திலாகாத் தொழிலாளர், ரிக்ஷாவண்டி இழுப்பவர்கள். தொழிலாளர் சமுதாயப் பாதுகாப்புக்கான எதிர்காலத் திட்டங்களை வகுப்பதற்கும் சர்க்கார் சட்டங்கள் இயற்றுவதற்கும் இத்தகவல்கள் உபயோகமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

★

## ரிக்ஷாக்காரர்

மனிதவர்க்கத்தையே இழிவு படுத்துவதும், காணச்சகியாத காட்சியாகஇருப்பதும், சுயசுகத்தில் அக்கரை கொண்டவனின் மனம் எவ்வளவு மரத்துவிடும் என்பதை எடுத்துக் காட்டுவதுமான, ரிக்ஷா இழுக்கும் வேலையைப்பற்றிச், சர்க்கார் இப்போதுதான் கண் திறந்து பார்க்கத் தொடங்கிற்று. இந்தக்கொடுமையை அடியோடு தொலைத்துவிடுவதே நல்லது. சர்க்கார், இப்போது இது சம்பந்தமாக விசாரணைகள்செய்து, சிலயோசனைகளை உருவாக்கி இருக்கிறார்கள்.


ரிக்ஷா இழுக்கும் வழக்கம் இந்நாட்டுடையது அல்ல 1915 முதல்தான் இங்கு நம்மக்கள் இந்த இழிவைஏற்றுக்கொண்டனர். சென்னையில் 6122 ரிக்ஷாகாரர்கள்,கல்கத்தாவில் 30000 ரிக்ஷாக்காரர்கள் உள்ளனர். கெட்டவன் பட்டணம் சேருகிறான் என்ற பழமொழிப்படியும், சாண்வயிற்றுக்கு எந்தப்பாடு படவும் தயார் என்ற முறைப்படியும், கிராமப்புறங்களிலிருந்து வந்தமக்கள், பெரிதும் ஜாதிக்கொடுமையால் தாக்குண்டவர்கள் இந்த வேலையில் ஈடுபடுகின்றனர். தெருஓரம், நடைபாதை, இவைகளே இவர்கள் குடி இருக்கும் இடம். சாப்பாடு, கிடைக்கும்போதுதான். ரிக்ஷா இழுத்து இழுத்து, நிரோகம்கட்டுத்தளர்ந்துபோய் வேலை செய்யவேமுடியாத கதிஅடைந்து சிலவருஷங்களுக்குப் பிறகு இவர்கள் கிராமமே போய்ச்சேர்ந்துவிடுகிறார்கள்.

"இத்தொழிலாளர்களுக்கு லைசென்ஸுகள் வழங்குவதற்கு முன்னால் அவர்களைக் கண்டிப்பாய் வைத்தியப் பரிசோதனை செய்வதும், இடம் பெயரும் சிகிச்சைச்சாலைகள் மூலம் அவர்களுக்கு வைத்திய உதவி அளிக்க ஏற்பாடு செய்வதும் மிக அவசியமாகும். மேலும், பகல் வேலைக்கும் இராவேலைக்கும் தனித்தனி கோஷ்டிகள் ஏற்படுத்துவதன் மூலம் வேலைநேரம் கட்டுப்படுத்தப்படவேண்டும். போஷாக்குள்ள உணவுப்பொருள்கள் அவர்களுக்கு அடக்கவிலைகளிலேயே கிடைப்பதற்குச் சிற்றுண்டிச்சாலை வசதிகள்செய்துகொடுக்கவேண்டும். பொழுதுபோக்குக்கும்,விளையாட்டுகளுக்கும்வசதிகள் இருந்தால், வாழ்க்கைத்தொல்லையை அவர்கள் ஓரளவு மறந்து உல்லாசமாக இருப்பதற்குப் பெரிதும்உதவியாகஇருக்கும்." என்று சர்க்கார் அறிக்கை தெரிவிக்கிறது.

1. ரிக்ஷாக்கள் முனிசிபாலிடிகளின் சொத்தாக இருப்பது, 2. சொந்தத்தில் ரிக்ஷாக்கள் வைத்திருப்பதற்கும், அவற்றைப்பழுது பார்ப்பதற்கும் கூட்டுறவு சங்கம் அமைப்பது. 3. விலையைப் பல தவணைகளில் கொடுத்து ரிக்ஷாவைச் சொந்தமாக்கிக்கொள்ளும் கட்டாயமான ஒரு ஏற்பாட்டின்படி ரிக்ஷா இழுப்பவர்களையே ரிக்ஷாவின் சொந்தக்காரர்களாக ஆக்கிவிடுவது.

ரிக்ஷா இழுப்பவர்களில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் மிக மிகச்சொற்பமே. இவர்களில்அநேகம்பேரிடம்குடிப் பழக்கமும் மற்ற கெட்டவழக்கங்களும் இருக்கின்றன. கடன்சுமைவெகுஅதிகம். சராசரியாகச், சிம்லாவில் தலைக்கு 482 ரூபாயும் கல்கத்தாவில் தலைக்கு 120 ரூபாயும், சென்னையில் தலைக்கு 112 ரூபாயும், கடனிருக்கிறது. கலியாணங்கள், பெற்றோர் வைத்துவிட்டுப்போன கடன்கள், குடி ஆகியவைகளே இந்தச் சுமைக்குக்காரணம். வட்டியால் ஏற்படும் பளுவு கணக்கில்லாமல் இருக்கிறது. வயது வந்தவர்களுக்குக் கல்வி போதிப்பதன்மூலமும், கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதன் மூலமும் கல்வியறிவையும், சிக்கனத்தையும் அவர்களுக்குப்போதிக்க முயற்சிகள் செய்யவேண்டுமென்று எடுத்துக் கூறப்படுகிறது என்றும் மேற்படி அறிக்கை தெரிவிக்கிறது.

—

★  ★

தொழிலாளர்கள் பிரச்னையில் பெரியார் கொண்டுள்ள கருத்து

1. பாட்டாளி மக்களே பெரிதும் சுரண்டப்படுகிறார்கள், முதலாளி வர்க்கத்தாலும், புரோகிதவர்க்கத்தாலும்.

2. தொழிலாளர் கிளர்ச்சிகளின்போது பொருளாதாரப் பிரச்னைகள் [illegible] தீர்க்கப்படும்போதும் என்று எண்ணுகிறார்களே யொழிய, புரோகிதப் பிடியிலிருந்து விடுபடும் முயற்சியைப் புறக்கணித்து விடுகின்றனர்.

3. திராவிட இனத்திலே, மிகமிகப்பெரும்பகுதியினர் பாட்டாளிகளே.

ஆரியஇனமோ, பாடுபடாத பிறவிமுதலாளிவர்க்கம். ஆகவே ஆரிய—திராவிடப் போர் என்பது, அடிப்படையிலே பார்த்தால், பொருளாதார பேத ஒழிப்புத் திட்டந்தான்.

4. ஜாதி முறை, சடங்கு முறை என்பன வெல்லாம், தந்திரமாக அமைக்கப்பட்ட, பொருளாதாரச் சுரண்டல் திட்டமேயாகும். ஆகவே ஜாதி முறையை ஒழிப்பதும், சமதர்ம திட்டந்தான்.

5. தொழிலாளர்கள், ஆரிய ஆதிக்கத்தை அகற்றாமல், பொருளாதாரத்துறையிலே எவ்வளவு முன்னேறினாலும், அவர்களுடைய வாழ்வு மலர முடியாது. ஆகவே, அவர்கள், ஆரிய ஆதிக்கத்தை அகற்றவேண்டும்.

6. பாட்டாளிகள் என்றால், ஆலைத்தொழிலிலே ஈடுபட்டு, சங்கம் அமைத்துக்கொண்டு, கூலி உயர்வு, குடி இருக்கும் வீட்டு வசதி, சுகாதார வசதிகள் ஆகியவைகளுக்காகக் கிளர்ச்சிகள் நடத்துபவர்கள் மட்டுமல்ல, பண்ணை வேலை செய்பவன், கல் உடைப்பவன், கட்டை வெட்டுபவன், குப்பை கூட்டுபவன், போன்ற சங்கமோ, கிளர்ச்சிசெய்யும் உணர்ச்சியோ கூடப் பெறாமல், சிதறி, வாழ்க்கையைச் சிதைத்துக்கொண்டுள்ள கோடிக் கணக்கான தொழிலாளர்களையே குறிப்பதாகும்.

7. தொழிலாளர்கள் அவல வாழ்வு பெற்றிருப்பதற்குப்பெரிதும் காரணமாக இருப்பதும், அவர்கள் எழுச்சிபெற்று, உரிமைப் போருக்கான வகை தேடிக் கொள்ளாமலிருப்பதற்கும் காரணமாக இருப்பது, மதத்தின் பேரால் அவர்கள் மனதிலே திணிக்கப்பட்டுள்ள மூட நம்பிக்கைகளே யாகும். ஆகவே அவற்றினின்றும் விடுபடுவது, தொழிலாளர்களின் விடுதலைக்கு, முக்கியமான முதற் காரியமாகும். இதனைச் செய்யாமற்போனால், இன்று தொழிலாளர்களின் மனதிலே குடிகொண்டுள்ளபழையகால நம்பிக்கைகளைஉபயோகப்படுத்திக் கொண்டு, தந்திரக்காரத்தன்மை அரசியல் கட்சிகள், புரோகித வகுப்பாரின் கூட்டுறவுடன், தொழிலாளரை நசுக்கிவிடமுடியும்.

8. "திராவிடநாடு திராவிடருக்கு" ஆகவேண்டுமென்று கூறும்போது, பாடுபடும் இனத்தைப் பாடுபடாத இனம் சுரண்டும் கொடுமையும், பாடுபடும் இனம் தன்னுடைய மனதிலே பூட்டிக்கொண்ட தளைகளால், அடிமைப்பட்டுக் கிடக்கும் கேடும் ஒழியவேண்டும் என்ற எண்ணத்தையே தான், வேறு வார்த்தைகளால் கூறுவதாகப் பொருள். சமதர்ம நாடு, சமூக சமதர்மம் என்ற அடிப்படை மீது கட்டப்பட்டால்தான் நிலைக்கும். இந்த ஒரு அம்சம், இந்நாட்டுக்கு மட்டுமே உள்ளது, வேறு இடங்களில், ஜாதியின் பேராலே, பொருளாதாரச் சுரண்டல் முறை ஏற்பட்டிருக்கவில்லை.

9. தன்னாட்சி பெற்ற திராவிட நாட்டிலே, ஆரிய ஆதிக்கம் இராது என்றால், தந்திரத்தால் ஏழைகளையும் உழைப்பாளரையும் ஏமாற்றி, உழைக்கவைத்து, மதத்தின்பேரால்கட்டிவிடப் பட்ட கற்பனைகளைக்காட்டி ஏமாற்றித் தங்களை மேல் ஜாதி என்று காட்டிக்கொண்டு, பாடுபடாமல் வாழும், சுரண்டல்காரர்களின் கொட்டம் இராது என்றே பொருள்.

10. திராவிட நாட்டிலே, உற்பத்திச்சாதனங்கள், பெரியதொழிற்சாலைகள், போக்குவரத்துத்தொழில், இலேவாதேவி, முதலிய பெரும் இலாபம் தரும் தொழில்கள், தனிப்பட்ட முதலாளிகளிடம் இராது, சர்க்காரேநடத்தும், ஆகவே முதலாளித்வம் இராது.

★ மே 11, 12, மதுரையில் கருப்புச்சட்டைப்படை மாகாண மாநாடு தலைவர்: பெரியார் ★

திராவிட நாடு

காஞ்சி] 5—5—46 [ஞாயிறு

# மே தினம்

★

"வளமையினருகே வறுமை, பலத்தினருகே பயம், இது ஏன்?" இந்தக் கேள்வி சாதாரண மக்களையல்ல கருத்துலகின் காவலர்களாக விளங்கியவர்களனைவரையும் கதிகலங்க அடித்தது. கி. மு. நான்காம் நூற்றாண்டில்வாழ்ந்தபிளேட்டோ என்னும் கிரேக்க தத்துவ ஞானியின் காலத்திலிருந்து கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆரம்பித்த மார்க்ஸ் காலத்தின் முன்வரை, 'மக்களின் நல்வாழ்வுக்கான' ஆராய்ச்சிகளனைத்தும் நம்பிக்கையான முடிவை அளிக்கவில்லை. பெரும்பகுதி வெறும் சொல்லாராய்ச்சியாகவும், வேதாந்த விசாரணையாகவும், சமாதானத்தையளிக்காத சமரச கீதமாகவும், நாட்டுக்குதவாத ஏட்டுரையாகவும் முடிந்தது.

இருட்டறையில் இன்னலுற்ற மக்கள் இன்பங்காண விழைந்த ஒவ்வொரு சமயமும் ஒடுக்கப்பட்டனர். ஆண்டை—அடிமை, உயர்ந்தவன்—தாழ்ந்தவன், மதக்குரு—பக்தன், மிராசு—உழவன், பிரபு—பணியாள், முதலாளி-தொழிலாளி, இவர்களிடையே ஏற்பட்ட வர்க்கப் போராட்டங்களே, உலக வரலாறாகும். கலையுலகிலும், கருத்துலகிலும் மற்ற நாடுகளுக்குக் கருவூலமாகவிளங்கிய கிரேக்கநாடு இவ்விதமான போராட்டத்தாலேயே உருக்குலைந்தது. ரோம்தனியரசு வீழ்ந்ததற்குக்காரணம், இத்தாலி நாட்டில் ஏற்பட்ட உயர்ந்தவன்—தாழ்ந்தவன் என்ற பிறப்புப்பேதம். இத்தகைய போராட்டங்கள் ஒன்றிரண்டல்ல நூற்றுக்கணக்கில் நடந்துள்ளன. தோற்றவர்கள்உள்ளம் உடைந்தனர், பின் வாங்கினர். போராட்டத்தின் இறுதியில் புரட்சிப்புயல் வீசியது அல்லது புகையின் வெம்மையிலே இருவர்க்கத்திலும் பெரும் பகுதி அழிந்தது. புயல் ஓய்ந்தபோதிலும், புயலினால் வீழ்த்தப்பட்ட பழைமை மரங்கள் மீண்டும் மண்ணில் நிலைநிறுத்தப்படவில்லை.

இந்தப் போராட்டங்களின் வரலாற்றை நன்றாக அலசிப்பார்த்தவர் மார்க்ஸ். பிரபுக்கள்—முதலாளிகளின் கொடுங்கோன்மை வெகுநாளைக்கு நிலைக்காதென்பதையும், உழைப்பாளிகளின் முயற்சியால்தான் உழைப்பாளர் உலகு மலரும் என்பதையும் அவர் எடுத்துக்காட்டினார். அவருடையதெளிந்தமுடிவு ஒடுக்கப்பட்ட உழைப்பாளர்களை ஒன்று சேர்த்தது, நலிவுற்ற உளத்தை புலியுளமாக்கியது. கசங்கிய கண்கள் கனலைக்கக்கின. மேதினி விழித்தது, மே தினம் பூத்தது.

முதல்மேதினம் 1889ல் பாரிசில் கூடிய உலகசமதர்மக் குழுவினரால் தொழிலாளரின் நன்னாளாகத் தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு மேதினத்திலும், அவ்விழாவைக் கொண்டாடக் கூடியிருக்கும் தொழிலாளர் தொகை தேய்வதாகக் காணோம். எங்கு உரிமைசூறையாடப்படுகிறதோ, உழைப்பு கொள்ளையடிக்கப் படுகிறதோ, உணர்வு சிதைக்கப் படுகிறதோ, உயர்நிலைவீழ்த்தப்படுகிறதோ, அங்கெல்லாம் மேதினம் போராட்டங்களின் ஆரம்பநாளாகவே கருதப்படுகிறது. சமுக, அரசியல், பொருளாதாரத் துறைகளில் ஒடுக்கப்பட்டு, இலையுதிர்ந்த மரமாக நிற்கும் தேய்ந்த திராவிடத்தில் மேதினம்கொடுமைகளைக்களைய நாம் எடுக்கும் கொடுவாளாகக் காட்சியளிக்கிறது.

1914மேதினத்தில்கூடிய பாட்டாளி "பெரும்போர் மூண்டுள்ளது" என்றுகேட்டிருப்பான். அதே சமயத்தில் ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட ருஷியத்தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்தனர் என்பதும் அவன்கருத்துக்கு வேலையைத் தந்திருக்கும்.

1918ல் மேதின விழாவில் ஏழ்மையின் சித்திரமாகிய அவன் "பெரும்போர் முடிவடைந்தது" என்றவுடன் பெருமூச்சுவிட்டிருப்பான். "உலகின் ஆறில் ஒருபகுதியான ருஷிய நாட்டில் புரட்சி வெற்றிபெற்றுள்ளது" என்ற செய்தி கண்களில் களிப்பைத் தேக்கியிருக்கும்.

1933ல் மேதினத்தில்இருசெய்திகள்—ஒன்று ஐந்தாண்டு திட்டங்களினால் அசைக்கமுடியாத தொழிலரசை ருஷியா அமைக்கிறது. மற்றொன்று ஜெர்மனி, இத்தாலியநாடுகளில் பாசிசப்பேயின் பலம் அதிகரித்துள்ளது என்பது.

1939ல் குமுறுகின்றயுத்த பீரங்கிகளிடையே மேதினத்தைத் தொழிலாளர் கொண்டாடினர். இறக்கிற பழைமையும், எழுகின்ற புதுமையும் வாழ்வுக்காகப் போராடின.

1945ல் மேதினம் வெற்றி தினமாகக்காணப்பட்டது. தொழிலாளர்வாகை சூடினர். பாசிசம் கல்லறைக்கு அழைத்துச் செல்லப்பட்டது.

பிற்போக்கு சக்திகளும், பழைமைவிரும்பிகளும் ஒவ்வொரு நாட்டிலும் முறியடிக்கப்பட்டுள்ளனர். இங்கிலாந்தில் தொழிற்கட்சி அரசாங்கத்தைஏற்றுள்ளது. பிரான்சில் சமதர்ம பொதுவுடைமைமுன்னணி, ஆஸ்ட்ரேலியா, நியுஜிலந்து தீவுகளில் உழைப்பாளரின் பலம், ஆஸ்திரியாவில் பாட்டாளி ஆட்சி, பெர்லினில் செங்கொடி இவைஉலகிலே உலுத்தருக்கு இனி இடம் இல்லை என்பதை வலியுறுத்துகிறது. பெரும்போராட்டத்தின்பின் நல்வாழ்வு வளமாகிறது.

எனினும் ஆரம்பிக்கப்பட்டக் கிளர்ச்சிகள், தீர்க்கப்படாத தகராறுகள், அணைக்க முடியாத தீச்சுழல்கள். இன்னும் வெடிக்காத வெடிகுண்டுகள், பல இருக்கின்றன. ஸ்பெயினில் பிராங்கோவின் ஆட்சி இன்னும்ஒழிக்கப்படவில்லை. கிரிசில் ஏற்பட்டுள்ளசிக்கல்மறைக்கப்படுகிறது, சீனாவில் உள்நாட்டுக் கலகம்முதிர்ச்சியடைகிறது. இவைகளுக்கிடையில் கொந்தளிக்கிற பசிபிக், குமுறுகிற எகிப்து, சமாதானத்தையேயறியாத இந்திய உபகண்டம்.

இந்தியாவின்மீது வெள்ளைஏகாதிபத்யம், இந்திய உபகண்டத்தில் பிர்லா — டாடா — பஜாஜ்களின் கொள்ளைலாப வியாபார ஆட்சி. ஏகாதிபத்ய அடக்கு முறை மாளிகையின் அடிப்படை கல கலத்துவிட்டது. பனியாக்களின் பளிங்கு மாளிகை மெருகு குலையாத பளபளப்புடன் காணக்கண் கூசும் வகையில் மிளிர்கிறது. ஏகாதிபத்ய வீட்டைவிட்டு வெளியேறிபனியாவின் பளிங்கு மாளிகையில் குடிபுக வெள்ளையன் முயற்சி செய்கிறான். அதன் விளைவு சமாதானப் பேச்சு. பேச்சு நடப்பது டெல்லியில். நாம் வாழ்வது திராவிடத்தில்.

இந்தியாவில் நூற்றுக்கு ஒருவரே, அதாவது 40 லட்சம்பேர்களே ஆலைத் தொழிலாளர். அத்தொகையில் 20 லட்சத்திற்குமேற்பட்டவர்கள் பம்பாய் மாகாணத்திலும் அதற்கடுத்த மாகாணத்திலும் சிதறியிருக்கின்றனர். இந்தக் கணக்கின்படி பார்த்தால் திராவிடத்தில் வாழும் உருவாகத்திரட்டப்பட்ட தொழிலாளர் பதினாயிரத்தில் ஐவராவர். இவர்களைத் தவிர உருவாகத் திரட்டப்படாத ஏனைத் தொழிலாளர்களான உழவன், கொல்லன், வண்டி யிழுப்பவன், தெருக்கூட்டுபவன் மரம் வெட்டுபவன், வீடு கட்டுபவன், செருப்புதைப்பவன், துணிவெளுப்போன், பயிர்விளைஞன், மீன்பிடிப்போன், இவர்களின் தொகை திராவிடத்தில் நூற்றுக்குத்தொண்ணூறுக்குமேற்பட்டதாகும். இவர்களின் எதிர்காலமும் மேதினத்தில் கவனிக்கப்படவேண்டும்.

உணவு, உடை, இருக்கை, பஞ்சங்கள் நமது நாட்டை அரித்துவரும் நேரத்தில் காங்கிரஸ் மந்திரிசபை பதவியேற்றுள்ளனர் என்ற செய்தி வருகிறது. "வெள்ளையனே வெளியேபோ" என்றமுழக்கத்தை முன்னிறுத்தி வெற்றிபெற்ற காங்கிரஸ் மந்திரியினருக்கு தம் வாக்கை நிறைவேற்ற அரிய சந்தர்ப்பம் கிடைத்துளது. நாட்டில் சமூகத்தின் பெயரால் நடக்கும் நாணுவிதமான அக்ரமங்களை அடக்கி கோவில்களிலும்மடங்களிலும்முடங்கிக்கிடக்கும்பெருஞ்செல்வம்மக்களை மாண்புறச் செய்யும் வழிக்குச் செல்லவைத்து, உழைப்போனை உயர்வற்றவனுக்கி உலுத்தன் உயர வழிகொடுக்கிற ஜமீன்தார் ஆட்சியை ஒழிக்கும் முயற்சியில், மந்திரிசபை இறங்கவேண்டும். உருவாகத் திரட்டப்பட்ட—திரட்டப்படாத பெருங்குடியினர், சேற்றிலும், சந்தியிலும், சேரியிலும், குப்பைமேட்டிலும் வாழ்பவர்களாக, தீண்டாதார்களாக ஒடுக்கப்பட்டு, உதைக்கப்பட்டுவரும் மக்களின் கொடுமைகளைப்போக்கும் வகையில், காங்கிரஸ் மந்திரிசபை ஈடுபடுமானால் திராவிட மக்களின் வணக்கம், வாழ்த்து, நல்லெண்ணம், நன்றி, ஒத்துழைப்பு, பாதுகாப்பு அனைத்தும் காங்கிரஸ் மந்திரிசபையின் பக்கம் இருக்கும். பரங்கி இருந்த இடத்திலும் பனியாஆட்சி செய்ய ஆரம்பித்தால், 'வேலைநிறுத்தம் செய்யாதே, நாட்டுக்குத் துரோகம்' என்று கூறிவிட்டு குண்டுகளாலும், துப்பாக்கிமுனையாலும் தொழிலாளரின் உறுதியைச்சிதைக்க விரும்பினால், திராவிடம் சீறிஎழுந்து போரிட்டேதீரும். திராவிடம் விலங்குகளை உடைத்தெறிய விரும்புகிறது, விலங்குகளை மாற்றவிரும்பவில்லை. மேதினி எங்கும் கொண்டாடப்படும் மேதின விழாவன்று திராவிடர் கழகம் கொள்ளும் உறுதி இதுவே; சுரண்டல்முறை ஒழிக்கப்படவேண்டும், எங்கெங்கு காணப்படினும், என்னென்ன உருவில் இருப்பினும்.

★

## மாஸ்கோவில்
# மே தினவிழா

மாஸ்கோ, சிகப்புச்சதுக்கத்தில் மேதினவிழா, விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. செஞ்சேனையின் அணிவகுப்பு அழகுறநடைபெற்றது. சோவியத்மக்கள், விழாவில் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

ஸ்டாலின், செஞ்சேனை அணிவகுப்பைப்பார்வையிட்டார்.

"பிற்போக்குச் சக்திகள் தலைகாட்டியபடிதான் உள்ளன. சாந்தியும் சமரசமும் இன்னமும் உறுதியாக்கப்படவில்லை. எனவே செஞ்சேனை, விழிப்புடன் இருந்துவர வேண்டும் என்று" சோவியத் படைத்தலைவருள் ஒருவரான, மார்ஷல் ரோக்ஸ்வோஸ்க்கி பேசினார்.

●

# ஒய்யார வாழ்க்கை!

| | வருஷ வருமானம் (சுமாராக) ரூபா | சர்க்காருக்குக் கொடுக்கும் கப்பம் ரூபா |
|---|---|---|
| போபால் நவாப் | 80 லக்ஷம் | 1 லக்ஷம் |
| இந்தூர் மஹாராஜா | 124 " | — |
| ரீவா மஹாராஜா | 60 " | — |
| ஹோல்காபூர் | 77 " | — |
| பரோடா மஹாராஜா | 260 " | — |
| குவாலியர் மஹாராஜா | 242 " | — |
| ஹைதராபாத் நிஜாம் | 799 " | — |
| காஷ்மீர் மஹாராஜா | 223 " | இரண்டு காஷ்மீர் சால்வைகள் |
| கொச்சின் மஹாராஜா | 90 " | 2 லக்ஷம் |
| புதுக்கோட்டை ராஜா | 23 " | — |
| திருவாங்கூர் மஹாராஜா | 244 " | 8 லக்ஷம் |
| மைசூர் மஹாராஜா | 345 " | 24 " |
| பவல்பூர் நவாப் | 45 " | — |
| கபூர்தலா மஹாராஜா | 36 " | — |
| நாபா மஹாராஜா | 25 " | — |
| பாட்டியாலா மஹாராஜா | 144 " | — |
| கோடா மஹாராஜா | 52 " | 434 ஆயிரம் |
| ஆல்வார் மஹாராஜா | 37 " | — |
| ஜெய்பூர் மஹாராஜா | 120 " | 4 லக்ஷம் |
| உதயபூர் மஹாராஜா | 67 " | 266 ஆயிரம் |
| ஜோத்பூர் மஹாராஜா | 142 " | 213 " |
| பிகானீர் மஹாராஜா | 121 " | — |
| பவநகர் மஹாராஜா | 150 " | 128 " |
| கோண்டால் மஹாராஜா | 50 " | 49 " |
| நவநகர் மஹாராஜா | 93 " | 50 " |
| கூச்பேகார மஹாராஜா | 25 " | 67 " |
| திரிபுரா மஹாராஜா | 30 " | — |
| ராய்பூர் நவாப் | 49 " | — |

★ மே 11, 12, மதுரையில் கருப்புச்சட்டைப்படை மாகாண மாநாடு திறப்பாளர்: அண்ணதுரை ★

**ரயில்வேத் தொழிலாளர்கள்**
**ஆலைத் தொழிலாளர்கள்**
**சுரங்கத் தொழிலாளர்கள்**
**குப்பைகூட்டும் தொழிலாளர்கள்**
**பஸ்ஓட்டும் தொழிலாளர்கள்**

*எங்கும், எந்தவிதமான*
*தொழிலாளர்களும்*
**வேலை நிறுத்தம் செய்கிறார்கள்;**
*• ஏன்?*
*விளையாட்டா? பொழுதுபோக்கா?*
**வேதனை! தாங்கமுடியாத வேதனை!**
*வேலை நிறுத்தம் தவிர வேறு வழி*
*இல்லை,*
*தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்ள.*

**தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்**
**செய்யும்போது**

*முதலாளி இலாபம் குறைகிறது*
*என்று குறை கூறுகிறான்.*
*சர்க்கார் அமைதி கெடுகிறது என்று*
*கூறுகிறது.*
தனம் படைத்த தலைவர்கள்
பொதுமக்களுக்கு இடைஞ்சல்
*என்று பேசுகின்றனர்.*
*ஆனால்*
**தொழிலாளர்களின் வீட்டிலே**
**துயரம், பட்டினி**
**சூழ்ந்துகொள்கிறது.**
**இதனைக் கவனிக்க மனம் இல்லை!**
*உரிமைக்காக, உணவுக்காகப்*
*போராடும் தொழிலாளியை*
*இலாபத்துக்காகப் பாடுபடும்*
**முதலாளி**
*அடக்கும்போது*
பொதுமக்கள் கடமை என்ன?
*தொழிலாளர்களை ஆதரிக்கவேண்டும்*
*அவர்களின் உழைப்பே சமுகத்தின்*
**உயிர்நாடி!**
*அவர்களின் வேதனை*
**நமது வேதனை**

★

*வேலை நிறுத்தம், என்ற சத்தம், இன்று நாட்டிலே, பல்வேறு பக்கங்களிலிருந்தும் கேட்கப்படுகிறது. எவ்வளவோ நாட்களுக்குச் சகித்துக்கொண்டிருந்துவிட்டுத், தொல்லைதாங்க முடியாமல் போய்விட்டதால், கெஞ்சிப்பயன் ஏற்படாமல் போனதால், தொழிலாளர்கள், வேலைநிறுத்தத்தைத் துவக்கியிருக்கிறார்கள் என்பதைப் பொதுமக்கள்உணர வேண்டும்.*

*வேலை நிறுத்தம் செய்வதுஎன்று தொழிலாளர்கள் தீர்மானிக்கும்போது, அவர்கள் என்னென்ன விதமான ஆபத்து, கஷ்டம், நேரிடக்கூடும் என்பதை அறியாமல் இல்லை. தெரியும். தெரிந்து, அந்த ஆபத்துகளையாவது அனுபவிக்கலாம், நமது குறைகள் தீர்க்கப்படவேண்டும், உரிமை நிலைநாட்டப்படவேண்டும், என்று உறுதிகொண்டே, வேலைநிறுத்தம் செய்கின்றனர்.*

*வேலைநிறுத்தம் என்று தீர்மானித்த உடனே, தொழிலாளர்களின் மனக்கண்முன், ஆத்திரமடைந்த முதலாளி,சீறும்சர்க்கார், சட்டத்துக்காகத் தடியடி தரமுன்வரும் அதிகாரவர்க்கம் இவர்கள் தோன்றாமலில்லை. பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள், கலகங்கள், தடியடி, சிறைப்படுதல், போன்ற காட்சிகள் அவர்கள் மனக்கண்முன் தோன்றாமலில்லை.*

*இவைமட்டுமல்ல! அணைந்த அடுப்பு! அழுகிறமனைவி! அலைகிற குழந்தைகள்! இந்தக் காட்சிகளும் தெரிகின்றன.*

# ★ வேலை நிறுத்தம் ★

—●—

*தெரிந்தும், வேலைநிறுத்தம் செய்கிறார்கள் என்றால்,என்னபொருள்? அவர்கள் எவ்வளவு பொறுக்க முடியுமோ, அவ்வளவும் பொறுத்துப்பார்த்துக் கடைசியில், வருகிற கஷ்டம் வரட்டும், அனுபவிப்போம், வேலைநிறுத்தம் செய்தே தீரவேண்டும் என்று தீர்மானிக்கிறார்கள். ஒருமோட்டார்பஸ் ஸ்தாபனம், அதிலே நடக்கும் வேலை நிறுத்தத்திலே 100 பேருக்குமேல் கைது செய்யப்பட்டார்கள், மதுரையில்! இந்த 100 குடும்பம், அந்த பஸ்ஸ்தாபனக்காரரைப்போல். பங்களாவில் அல்ல வாழ்வது. பாதாம் பருப்பின் தோல் சரியாக நீக்கப்படவில்லை என்பதல்ல அவர்களின் கஷ்டம்! வேலைக்கேற்ற கூலி! உழைப்புக்சேற்ற ஊதியம்! இல்லை, தாருங்கள் என்று கேட்கிறார்கள். உழைத்துவிட்டுக் கேட்கின்றனர், முதலாளியின் பணப்பெட்டியை நிரப்பி விட்டுக் கேட்கிறார்கள்: கேட்டுக் கேட்டுப்பார்த்துச் சலித்துப் போனபிறகே, வேலை நிறுத்தம் துவக்கப்படுகிறது. வேலை நிறுத்தம் தொழிலாளருக்குவேதனைதருவது; அந்த வேதனையை அவர்களாக ஏற்றுக்கொள்வதன் காரணம், அவர்களுக்குள்ள குறைகளால் இதைவிட அதிகமான வேதனை அடைகிறார்கள்.*

*"வேலை நிறுத்தம்" என்ற ஒரே ஆயுதமே தொழிலாளரிடம் இருப்பது. ஆனால் அதுஇருபக்கம்கூருள்ளது. இதனைப்பெற, தொழிலாளர்கள் பட்டபாடு கொஞ்சமல்ல.*

*"வேலை நிறுத்தம்" செய்வது என்ற எண்ணத்தையே கருவறுக்கவும், வேலை நிறுத்தம் துவக்கப்பட்டால் அழிக்கவும், வேலை நிறுத்த சமயத்திலே, தொழிலாளரிடையே கட்டுப்பாட்டையும் ஒற்றுமையையும் குலைக்கவும்,வேலைநிறுத்தக்காரர்களைப்பலாத்காரச் செயலில் இழுத்துவிடும் குடிலர்களை ஏவவும், பலமான முயற்சிகளைப் பல்வேறுநாடுகள் பன்முறையும் செய்துபார்த்து, அலுத்துப்போயின.இன்று,"தொழிலாளர்களின் வேலை நிறுத்தம்" எனும் கருவியின் சக்தியைச் சகலரும் உணர்ந்து கொண்டுள்ளனர். இந்தச்சக்தியைப் பெறுவதற்காக, எண்ணற்ற தொழிலாளர்கள் தங்கள் இரத்தத்தைச் சிந்தியுள்ளனர்.*

*தொழிலாளர்களின் எழுச்சிக்குறியானவேலைநிறுத்தங்கள்தோன்றியபோதெல்லாம், பல்வேறு நாட்டுத் துரைத்தனத்தார், கையாண்ட கடுமையான முறைகளையும், அவற்றின் விளைவுகளாகத் தொழிலாளர்கள்பட்ட அவதியையும்கேட்டால்,*

*கல்மனமும்கரையும். தொழிலாளர் வேலை நிறுத்த காலத்திலே பட்ட அவதிகளை அறிவது மிரட்சிக்கு வழியாகாது—உறுதிக்குஉறுதுணையாகும்.*

*உள்ளத்தை வாட்டும், ஒருதுயர் மிக்க சம்பவம் இங்கு தீட்டப்படுகிறது.*

*இடம்:— செயின்ட்பீடர்ஸ் பர்க்.*

*காலம்:— 1905.*

*இன்றும் இச்சம்பவத்தை நாசத்தைக் கக்கிய ஞாயிற்றுக்கிழமை என்று வரலாற்றினர் கூறுகின்றனர். ஏசுவின் விசுவாசிகளுக்குச் சாந்தமும் சன்மார்க்கமும் தரும் ஞாயிற்றுக்கிழமை, புனிதநாள். அந்த நாளன்று,முதலாளித்வத்தை எதிர்த்த தொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர், ஜனவரி 9ந்தேதி, 1905ம் ஆண்டு.*

*ஜாரின் கொடுமை ஒருபுறம், முதலாளிகளின்கொடுமைமற்றோர் புறம், இருபெரு நெருப்புக்கிடையே சிக்கித்தவித்தனர்ரஷியத் தொழிலாளர்கள். 1904லிருந்தே, தொழிலாளர்களின் கொதிப்பும் குமுறலும் அதிகமாகி வந்தது. கொடுங்கோலர்களுக்கு இயற்கையாக ஏற்படக்கூடிய அலட்சியபுத்தியும் ஆணவமும், மிக அதிகமான அளவிலே கொண்டிருந்த ஜார், தொழிலாளர்களின் கோரிக்கைகளைச்சட்டை செய்யவில்லை.*

*சுட்டுத்தள்! என்ற உத்தரவைச் சொல்லிச்சொல்லிப்பழக்கப்பட்ட எதேச்சாதிகாரிக்கு எப்படித் தொழிலாளர்களின் துயரின் தன்மையும் அளவும் புரியும்?*

*ஜாரின் ஆட்சிப்பீடத்தின் அலங்காரப்பதுமைகளுக்குத் தொழிலாளரின் ஆவேசக்கிளர்ச்சி பிடிக்கவில்லை. சதி செய்தேனும் தொழிலாளர்களை நசுக்கிவிட வேண்டும் என்று அந்தக்குப்பல் தீர்மானித்தது. இந்தச்சதிச்செயலுக்கு, சன்மார்க்க போதகராக அமர்த்தப்பட்ட ஒருபுரோகிதரையே அமர்த்தினார்கள். அக்கயவனின் பெயர் கேபான். தொழிலாளரின் உரிமைக்காக உண்மையில் பாடுபடும் இயக்கத்தை ஒழிக்க, இந்தக் கேபான் ஒருபோலிச் சங்கம் ஆரம்பித்து, தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கும் பணி புரிவதாகப் பசப்பினான். சிலர், அவனுடைய வஞ்சக வலையில் சிக்கினர்.*

*1905, ஜனவரி 3-ம் நாள், செயின்ட்பீடர்ஸ்பர்க்நகரில், ப்யூடிலாவ் எனும் தொழிற்சாலையில் காரணமின்றி வேலையைவிட்டு 4 தொழிலாளர்கள் நிறுத்தப்பட்டனர். வேலை நிறுத்தம் செய்தனர் தொழிலாளர்கள். பல்வேறு இடங்களிலுள்ள தொழிலாளர்களுக்கும் குறைகள் இருந்தன, எனவே, பீடர்ஸ்பர்க்கில் ஆரம்பமானவேலை நிறுத்தத்தின்பொறிகள் ஆங்காங்கு பரவி, நாடு முழுவதுமே தொழிலாளர் கிளர்ச்சித் தீ மூண்டுவிட்டது. ஜார் சர்க்கார் கிலி கொண்டனர். எப்படியாவது தொழிலாளர் கிளர்ச்சியை ஒழித்துவிடத் தீர்மானித்தனர்.*

*கபடசந்யாசியான காபான்,சதி செய்தான்.*

*"தொழிலாள நண்பர்களே! வீணாக விரோத மனப்பான்மையைக்காட்டவேண்டாம். உங்கள் குறைகளோ மிக நியாயமானவை. யாரிடம் சொன்னாலும் அவைகளைத் தீர்த்துவைக்கவேசம்மதிப்பார்கள். அதிலும் நமது ஜார்மன்னன், உங்கள் குறைகளைத் தீர்த்துவைக்கத் தயங்கமாட்டார். ஆகையினால் 9ந்தேதி யன்று, தொழிலாளத் தோழர்கள் யாவரும் திரண்டு வாருங்கள். குறைகளைக்கூற, ஊர்வலமாகச்செல்வோம், மன்னரின் மாரிகால மாளிகைக்கு. வேறு கொடிகள் வேண்டாம், நமது ஆலயக்கொடிகளை ஏந்திச் செல்வோம். ஜாரின் உருவப்படங்களையும் தூக்கிச்சென்று, மன்னனைக் காண்போம். நமது குறைகளை நிச்சயமாக ஜார் தீர்த்துவைப்பார். ஜனவரி9ந்தேதி, புறப்படுங்கள்திரண்டு" என்றுஉபதேசித்தான்.நயவஞ்சகம் அவன்திட்டம் என்பதைத்தெரிந்து கொள்ளவில்லை. நயமாக நியாயம் கேட்டால், ஜார் கருணை காட்டுவார் என்று நம்பினார்கள். ஜார்மன்னரைப் பேட்டிகாணலாம்என்றான் காபான். மக்கள்மயங்கிவிட்டனர்.*

*"தோழர்களே! மண்டியிட்டு மனுப்போட்டு யாரும்உரிமையைப் பெற்றதில்லை–பெறமுடியாது. ஜாரிடம் சென்று, மனுச்செய்திடுவது மடைமை. மதிக்கமாட்டான். குறைகளைத் தீர்க்கவுமாட்டான். தோழர்களே! நீங்கள் திரண்டு சென்று, அரண்மனைவாயலை அடைந்ததும், ஜாரின் ஆட்கள் உங்களைச் சுட்டுக் கொல்வார்கள். வேண்டாம், ஆபத்து வரும்" என்று பொதுஉடைமைக்காரர்கள் மன்றாடிக்கூறினர். மக்கள் ஒரேமயக்கத்தில் இருந்தனர், மனு தயாரித்தனர், கபடனின் திட்டப்படி,குடும்பம் குடும்பமாகக் கிளம்பினர். ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் பேர் கொண்ட மாபெரும் ஊர்வலம், ஆண் பெண், குழந்தை குட்டி உட்பட.*

*"செயின்ட்பீடர்ஸ்பர்க் தொழிலாளர்களாகிய நாங்களும் எங்கள் பெண்டுபிள்ளைகளும், வயதானஎங்கள் பெற்றோர்களுமாக, மன்னரிடம் முறையிடுகிறோம். மன்னவரே! நாங்கள் கொடுமைக்காளாகியிருக்கிறோம், தாங்கமுடியாத உழைப்பு, சகிக்கமுடியாத அவமானம், எங்களுக்கு. மிருகங்கள்போல எம்மை நடத்துகிறார்கள். ஏழ்மைப்படுகுழியில் தள்ளப்பட்டுவிட்டோம். எங்களால் இனிப்படமுடியாது. இந்த வேதனை தரும் வாழ்வைவிட, சாவு மேல் என்றுதீர்மானிக்கும் நிலைக்கு வந்துவிட்டோம்" என்று, அந்த மக்கள், மதப்போர்வையில் உலாவிய அந்த்மனிதகுல விரோதிகாபானின் சொல்லைக்கேட்டு ஏமாந்தமக்கள், மனு தயாரித்தனர், மன்னனிடம் சமர்ப்பிக்க.! மன்னனோ அங்கு வேட்டுகளைத் தயாரித்துக் கொண்டிருந்தான், நீதி கேட்பவர்களைச்சுட்டுத்தள்ள.*

(அடுத்த பக்கம் பார்க்க)

கவிஞர் பாரதிதாசன் அவர்களின் நிதிக்காக இதுவரை அன்பர்கள் அளித்த நன்கொடை:—

## ரூபா 12,450-10-0

**பன்னீராயிரத்து நானூற்று ஐம்பது ரூபாவும் அணா பத்து மாகும்.**

*குறிப்பு:— மேற்படி நிதியளிப்பு விழாவை 26–6–46ல் சென்னையில் நடத்துவதென்று, கவிஞர்நிதிக்கமிட்டியார் முடிவு செய்திருப்பதால், மேற்படி நிதிக்கு உதவுவதாக வாக்களித்த அன்பர்களும் மற்றும் தோழர்களும் தங்களுடைய அன்பளிப்பை 20–6–46-க்குள் அனுப்பித் தருமாறு கமிட்டியின் சார்பில் கேட்டுக்கொள்ளுகிறேன்.*

**சி. என். அண்ணாத்துரை**
*பொருளாளர்*
*பாரதிதாசன் நிதிக் கமிட்டி*
"திராவிட நாடு" காரியாலயம்
**காஞ்சிபுரம்**

**மே 11, 12, மதுரையில் கருப்புச்சட்டைப்படை மாகாண மாநாடு கொடிஏற்றுவோர்: அர்ஜுனன்**

## வேலை நிறுத்தம்

5-ம் பக்கத் தொடர்ச்சி

மண்டியிடச்சென்ற மாபெரும் ஊர்வலத்தை, கெஞ்சி நின்ற மக்களை, நீதிகேட்ட மக்களை, பரிதாபத்துக்குரியபாட்டாளிமக்களை, அரண்மனை வாயலிலே அழுகுரலுடன் நின்ற அந்த மக்களை, இரண்டாம் நிக்கோலாஸ் என்ற மன்னன், சுட்டுத்தள்ளும்படி உத்தரவிட்டான். சுட்டனர்! பெண்கள்மீது, குழந்தைகள்மீது! ஆயிரம்பேர் மாண்டனர், இரண்டாயிரம் பேருக்குக் காயம். இரத்தவெள்ளம் தெருக்களில், படுகொலை! பாட்டாளி மக்கள், உரிமைகேட்கச்சென்ற இடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டனர். கருணையைத்தேடிவந்தனர், மரணத்தைக்கண்டனர். மன்னன் நீதியின் சின்னம் என்று நம்பினர், அவன் அக்ரமத்தின் தலைவன் என்பதைக் காட்டிவிட்டான். உரிமை கேட்டனர், உயிரைப்போக்கினன். மன்னனைக்காண, எவ்வளவு பரிவுடன் வந்தனர்மக்கள், வழிநெடுக, கடவுள் தோத்திரப் பாடல்களைப் பாடியபடி வந்தனர். ஏறத்தாழஒரு பிரம்மாண்டமான பஜனை. அரசன் ஆண்டவனின் பிரதிநிதி என்றுநம்பி வந்தனர், அழிவை ஏவினன்! சுட்டுத்தள்ளினன்! ஆயிரம்பிணம் அரண்மனை எதிரே! உழைத்து உருமாறிய உத்தமர்களின் உடல்களைத், துப்பாக்கிக்குண்டுகள்பிளந்தன. வியர்வையைக்கொட்டினர், உழைப்பின் போது; இரத்தத்தைக்கொட்டினர் மன்னனின் கொடுமை தாக்கிய போது. "மன்னவா!" என்றுகெஞ்சினர், அந்த மமதையாளனை, அவன் சுட்டுத்தள்ளு, என்று உத்தரவிட்டான், கூப்பியகரத்துடன்நின்றமக்களை. பிணம், பிணம்! இரத்தம்! துப்பாக்கிக்குண்டுகள்பறந்தன, தொழிலாளர்களைச்சுற்றி. கூடவந்தவர்கள் குப்புறக்கீழே விழுந்து பிணமாவதைக்கண்டனர். வாழ்வு வேண்டி வந்த இடத்தில் சாவு ஏவப்பட்டதைக்கண்டனர். சாவுக்கும் வாழ்வுக்கும் வித்தியாசம் இல்லை என்ற முடிவுக்கு வந்தனர். மரணத்தை, நேருக்கு நேராகவே சந்தித்தனர். உறுதிபெற்றனர். 'கபடன் அழைத்து வந்தான், கயவன் அழிக்கிறான், கவலையில்லை, தோழர்களே! இனிக் கலங்கத்தேவையில்லை! கிளம்புங்கள்! ஒழிக ஜாராட்சி! கொடுங்கோன்மை ஒழிக! புரட்சி ஓங்குக!' என்றுமுழக்கமிட்டனர். மன்னன், கொலைகாரனுன், மக்கள், புலிகளாயினர்! பூஜைசெய்ய வந்தனர் பூபதியை, அவன், படுகொலைக்கு உத்தரவிட்டான், புரட்சிப்படை பாகமாறிவிட்டது பஜனை க் கூட்டம். தீ பரவிற்று, எங்கும், மேலும் மேலும், அணைக்கமுடியாத அளவுக்கு. சுடுவதற்கு முன்பு ஜனத்திரள்ஒருஇலட்சத்துநாற்பதாயிரம்! பிணம் வீழ்ந்த பிறகு, ஜனத்திரள் நாலுஇலட்சத்து நாற்பதாயிரம்!! ஒரேமாதத்தில், ரஷியா எங்கும் புரட்சிப்படை! கிளர்ச்சி மயம்!

"கபடனை நம்பவேண்டாம் என்று அறிவுறுத்தினோமே, கேட்டீர்களா? அந்தோ! படுகொலைக்கு ஆளானோமே" என்றனர் பொது உடைமைக்காரார்கள், நாசம் வீசுவான் மன்னன் என்று எண்ணவில்லை, நம்பினோம், என்றனர்பலர். சிலர் "இல்லை! முழுவதும் நம்பிவிடவில்லை, இதுபோல ஏதேனும் நடைபெறக் கூடும் என்று கூட எதிர்பார்த்தோம். நடப்பது நடக்கட்டும் என்று துணிந்தே புறப்பட்டோம்" என்று கூறினர். தாய்மார்களே, இந்தச் சமயத்திலே அபாரமான வீரம் காட்டினர்.

ஊர்வலம் புறப்படுமுன்பே கரோலினு எனும் மாது, தாய்மார்களை நோக்கி, "நியாயமான காரியத்துக்காகப் புறப்படும் ஆடவரைத் தடைசெய்யாதீர்கள், ஆபத்து நேரிடுவதாயினும் தடைசெய்யாதீர்கள் வாருங்கள் வனிதையரே! எங்களைத் தாக்கினுல், சுட்டுத்தள்ளினுல் அழாதீர்கள்!" என்று சொன்ன போது, வீரம், கரை புரண்டோடியது.

படுகொலை தான் நடந்தது, ஆனல் அசுனல் பாட்டாளிகளின் பலம் குன்றிவிடவில்லை, ஓங்கி வளர்ந்தது, ஜாரின் ஆட்சிக்குத் தான் ஆபத்துபிறந்தது. செயிண்ட் பீடர்ஸ பர்க்கில் பிணம் விழுந்தது, உடனே ரிகா, மாஸ்கோ, வார்சா, பக்கு, என்றுபல்வேறுநகர்களிலே, குண்டுக்கு மார்காட்டி நிற்கும் மாவீரர்கள் ஆயிர மாயிரமாகத் திரண்டு விட்டனர். புரட்சி பெருங் குரலில் பேசிற்று! நாட்கள், வாரங்கள், மாதங்கள் ஓடின! புரட்சி ஓயவில்லை! மே பிறந்தது! மேதினவிழாவன்று, தொழிலாளர் முழக்கம், துப்பாக்கி வெட்டுச் சத்தத்தைக் கேலி செய்தது, அளவு தன்மை, வலிவு, விளைவு, எதிலும் சரி! எங்கும் வேலை நிறுத்தம்! கிராமங்களெல்லாம்பாசறைகளாயின! உழவர்கள் உக்கிரமாகக் கிளம்பினர். கருங்கடலில், போடோம்கின் என்ற யுத்தக்கப்பல், புரட்சியாளரிடம் சேர்ந்துகொண்டது. கப்பற்படையிலே புரட்சி வீசவே, சர்க்கார் கிலிகொண்டனர். பெரிய படைகொண்டு, தீரமாக எதிர்த்து நின்ற கப்பலை அழித்தனர். கப்பலைத்தான்! புரட்சியை அல்ல! அது பரவிற்று, பரவிக்கொண்டே இருந்தது. ஜார், பணிவதாக வாக்களிக்கும்வரை, ஓயவில்லை. பாசாங்கு செய்து, ஒருபசப்பும் சமாதானத் திட்டத்தைக் காட்டி, மக்களை ஏய்த்தான் மன்னன். என்றாலும், மாபெரும் புரட்சிசக்திமுன் மன்னன் மண்டியிட்டாக வேண்டும் என்று விளங்கிவிட்டது. புரட்சிக்காரருடன் சமரசம் பேசிக்கொண்டே, புரட்சியை நிறுத்த முடிந்தது. குண்டு போதும்கொதித்தெழும் பக்களை அடக்க, என்று எண்ணினன்; போதாது என்ற பாடம் பெற்றான்; பணிவதாகக் கூறினன்.

உண்மையானபணிவல்ல! ஆனல் முதல் முறையாக மன்னன் மக்களிடம் மனுச்செய்து கொண்டான், அதுமகத்தான வெற்றி. ரஷிய மாபெரும் புரட்சிக்கு, வித்து! சமதர்மத்தைக் காணமுடியும் என்ற நம்பிக்கைஉதயமாயிற்று; கொடுத்த விலை அபாரம்! ஆனல் பெற்ற பொருள், சுதந்திரமல்லவா, உரிமை அல்லவா, சமதர்மம் அல்லவா? நாசம் கக்கிய ஞாயிற்றுக்கிழமை தான், 1905, ஜனவரி 9, ஆனல், அன்றே தான், புரட்சிக்கும்வெற்றி! பலியானவர்கள் போக மற்றவர்கள் புதுவாழ்வு பெற்றனர்.

தீயிலே குளித்து எழுந்து, பாட்டாளிமக்கள் உரிமை பெற்றனர். அவர்களை, அவர்கள் காட்டிய வீரத்தைத், தியாகத்தை உலகம் மறக்காது. அவர்களை நினைவிலே நிறுத்தினுலே, கோழை வீரனுவான்!!

---

## சென்னையில் காங்கிரஸ் மந்திரிசபை

தோழர் டி. பிரகாசம் அவர்கள் முதல் அமைச்சர். மற்றும் தோழர்கள் பக்தவத்சலம், கிரி, பாஷ்யம், கோட்டி ரெட்டி, அவினுசிலிங்கம், காந்த் கூர் மய்யா, டேனியல்தாமஸ், குமாரசாமி ராஜா, உருக்மணிஇலட்சுமிபதி அம்மையார் ஆகிய பதின்மர் அமைச்சர் குழுவில உள்ளனர். இன்னும் இருவர் சேர்க்கப் படலாமென்றும் கூறப்படுகிறது.

## ஏழையின் விழா

7-ம் பக்கத் தொடர்ச்சி

நிலைக்கு ஏற்றபடி அவனைக்கொடியவன், முரடன், முட்டாள், வேஷக்காரன், கபடன், போக்கிரி, என்று பலவாறு ஏசிப்பேசும் உலகம், அவனுடைய அப்போதைய நடவடிக்கையைக் கவனிக்கிறதே யொழிய, ஏன் அவன் முரடனுனன், ஏன் கபடனுனன், முட்டாளாகவேண்டியகாரணம்என்னஎன்றுயோசிப்பதில்லை. எப்படி யோசிக்கும்! இப்படிப்பட்ட ஏழைகளின் ரகங்களிலே, எந்தரகத்திலேயும், தாங்கள் தள்ளப்படாமலிருக்க வேண்டுமே என்ற கவலை, திகில், மற்றவர்களைப் பிடித்து ஆட்டுகிறது. ஆகவே அவர்கள், தங்கள் தங்கள்நிலைமைகெடாதபடி பார்த்துக்கொள்ளும் சுயகாரியத்திலேயே கண்ணுங்கருத்துமாக இருந்து விடுகின்றனர். ஏழை அழுகிறான், ஏழையின் தொகை வளருகிறது, ஏழையின் "ரகங்கள்" வளருகின்றன; கவனிப்பார் இல்லை! சமுதாயத்திலே, ஏழைகளின் தொகை பெருகுவது, படகுக்கு அடியிலே ஏற்படும் வெடிப்புகள் என்பதை உணருவதில்லை! ஓடத்திற்கு அலங்காரப்பூச்சுத்தேடுகிறார்கள்!! உல்லாசப் பயணத்துக்கு, நான் நீ என்று முந்திக்கொள்கிறார்கள். அவர்கள் அறியவில்லை, ஓடத்துக்கு அடியிலே ஏற்படும் ஓட்டைகளை!

ஏழை, என்ற ஒரு சொல்லிலே, அடங்கியிருக்கும் ஆபத்தை உணராமலேயே, சமூகத்தின் காவலர்கள் என்ற நிலை பெற்றவர்கள் தத்தம் காரியத்தையே கவனித்துக்கொண்டு போகின்றனர்.

ஏழை, இன்று அழுகிறான்! இன்னும் கொஞ்ச நாட்களில் அவன் கண்கள் வறண்டுவிடும், நீர்வராது!

ஏழை சிரிக்கப் போகிறான்! தன் சகாக்களின் தொகை பெருகியது கண்டு! பல ரகமான ஏழைகள் இருப்பதுகண்டு! அந்த ஏழைகளைக் கண்டு, சீமான்கள், பயந்து, பதுங்குவதுகண்டு! ஊரெங்கும் ஏழை, பெருவாரியாகஏழைகள், இடையே சிறு கூட்டம் செல்வவான்கள், என்றால் அதன் பொருள் என்ன? இன்று உணர மறுக்கிறார்கள் உடைமைக்காரார்கள், பிரபுக்களைச் சூழ்ந்துகொண்டு பட்டினிப் பட்டாளம் நிற்கிறது என்று தான் அதற்குப் பொருள். பிரபுவின் அலங்காரத்தை ஏழையின் 'அலங்கோலம் கேலிசெய்யும்! பிரபுவின் பன்னீர் வாடையை, ஏழ்மையின் துர்நாற்றம், இருக்குமிடம் தெரியாது அடித்துவிடும்! ஏழை பெருகுகிறான்! ஏழ்மை வளருகிறது! இல்லாதார் தொகை ஏறுகிறது. இதன் உண்மையான கருத்து, சமூகம் எனும் மாளிகையின் சுற்றுச்சுவர் சரிகிறது என்பது தான்! பூந்தோட்டத்தை நோக்கிப் புயல்வருகிறது என்று பொருள்!

பொன்னும் பொருளும், போக போக்கியமும், அந்தஸ்தும் அதிகாரமும், புன்சிரிப்பைத் தருவது காண்கிறோம் இன்று. இந்தப்புன்சிரிப்பு, நல்லதல்ல! புலம்பல் சத்தம், கேட்க ஆரம்பித்து விட்டது.

இதனை உணர்ந்து, ஏழைஎன்றும் பணக்காரன் என்றும் இருவர்க்கம் இருப்பது, பொதுவாகவே சமூகத்துக்குக் கேடு, ஆபத்து, என்று எடுத்துக்கூறி, பாட்டாளியின் துயரைத் துடைக்கப்பாடுபட்டார்கள், சமதர்ம நோக்குடைய தலைவர்கள். அந்த அரும்பணியின் ஆரம்ப வேலை, தொழிலாளரின் உழைப்பு, காலம், அளவு, கட்டு திட்டம் இன்றி முதலாளிகளால் சூறையாடப்படுவது தடுக்கப்பட வேண்டும், என்ற துவக்கப்பட்ட முதல் முயற்சி மே தினம்.

அந்தமுதல்முயற்சிதான் மேதினம்! மேதினிக்குப் புதியபாடம் புகட்டிய தினம்!

மேதினம், ஏழையின் விழா!

---

## தெரியுமா?

ரயில்வே கம்பெனிக்கு,

1939-ல் 107-கோடி

1945-ல் 214-கோடி

ரூபாய் இலாபம் கிடைத்திருக்கிறது.

ஆனல், 2,64,000 தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கத் தீர்மானித்திருக்கிறது

தென் இந்திய ரயில்வேயில், உள்ள தொழிலாளர்கள்42000பேர்

இதில் 30000 பேர், 25-ரூபாய்க்குக் குறைந்த சம்பளம் பெறுபவர்கள்.

16000-பேர், 15-ரூபாய்க்குக் குறைந்த சம்பளம்.

ஒரு காங்கி ஆள் வாங்கும் சம்பளத்தைப்போல 300மடங்கு அதிகமான சம்பளம், ரயில்வே ஜெனரல் மானேஜருக்கு.

ஏராளமான இலாபத்தைக் குவித்துக் கொடுத்துவிட்டபிறகே, ரயில்வேதொழிலாளர்கள், தங்கள் சம்பளத்தை உயர்த்தும்படி கேட்கிறார்கள். ஏன் உயர்த்தக்கூடாது? ஏன், இரண்டு இலட்சம் தொழிலாளரை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்?

அவர்களுக்கு வழி என்ன? ரயில்வே போர்டின் போக்கு சரியா?

போது மக்களே! தீர்ப்பளியுங்கள். நியாயம் வழங்குங்கள்.

---

## மாங்கனீஸ் சுரங்கத்தொழிலாளி

இத்துறையில் லாபம் அதிகமாக இருந்த போதிலும் கூலிவிகிதம் குறைவாகவே இருந்துவருகிறது. காண்ராக்ட்முறை ஒழிந்தால் தொழிலாளருக்கு அனுகூலம் ஏற்படும். இத்துறையிலுள்ள தொழிலாளர்கள் ஸ்தாபன ரீதியில் தங்களைத் திரட்டிக்கொள்ளவேயில்லை. இவர்கள் தங்கள் பலங்கொண்டு காரியங்களைச் சாதிப்பதற்கு இன்னும் வெகுகாலம் ஆகும்.

மாங்கனீஸ் ஒருபிரதான உலோகம். உருக்கு உற்பத்தியில் அதுமுக்கியமாய் வேண்டப்படுகிறது; ரசாயனச்சரக்குகள் தயாரிப்பிலும் கெட்டி மின்சாரபாட்டரிகள் தயாரிப்பிலும் பெருவாரியாக உபயோகப்படுகிறது. இக்கனியை முதன் முதலாக 1892ல் விசாகபட்டினத்தில் வெட்டிஎடுக்கஆரம்பித்தார்கள். நாகபுரி ஜில்லாவில் 1894ல் அத்தொழில் தொடங்கப்பட்டது. இப்போது இக்கனி வெட்டிஎடுக்கும் இடங்கள் சென்னை, மத்திய மாகாணம், பம்பாய், பீஹார் ஒரிஸ்ஸா, மைசூர், சாந்தூர், முதலிய இடங்களாகும்.

இத்துறையில் 25000 பேர்கள் வேலையிலீடுபட்டிருக்கிறார்கள். இவர்களில் சுமார் பாதிப்பேர் பெண்கள். பெரும்பாலான சுரங்கங்கள் வெறும் திறந்தவெளிகளே சுரங்கங்கள்கூட 350 அடி ஆழம் தான் இருக்கும். மேல்தரைச் சுரங்கங்கள் நாளொன்றுக்கு 10—மணிநேரம்வேலைசெய்து வருகின்றன. மத்திய மாகாணத்திலுள்ள மூன்று சுரங்கங்களிலும் வெளிச்சமும் காற்றோட்டமும் மட்டமாகவே இருக்கின்றன. ஆனல் பம்பாயிலுள்ள சுரங்கத்தில் நிலைமை மேலாக இருக்கிறது. குடியிருப்பு வசதியும் சுகாதாரஏற்பாடுகளும் திருப்திகரமாக இல்லை. கூலி விகிதம் ஆண்களுக்கு 7 அணாமுதல் 11 அணா வரையிலும் பெண்களுக்கு சுமார் 5-அணாவாகவும்இருக்கிறது.

மதுரை மாநாட்டில், திராவிட வீர நடிகமணி எம். ஆர். ராதா "போர்வாள்" நாடகம். வருக!

## மூல வியாதிகளுக்கு யௌவன பிராஷ்

**கருணைக்கிழங்கு லேகியம்! ஆப்ரேஷன் பயன்தராது**

மூல முளைகள், ரத்தப், சீழ்வடிதல், குத்து, வலி, மலபந்தம், வாய்வு பவுத்திரக் கட்டிகள், 3-வேளை மருந்தில் உபத்திரவங்கள் தணிந்து சுகம் காணலாம். இதுபோல் எந்த மருந்திலும் சுகம் காணமுடியாது.

**12 நாள் யௌவன பிராஷ் ரூ. 3 சரஸ்வதி வைத்தியசாலை பழனி, S. I.**

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:—

T. N. சொக்கலிங்கம்பிள்ளை மருந்து ஷாப் மதுரை.
தி. மெடிகல் & ஜெனரல் ஸ்டோர் எஜன்ஸி பொள்ளாச்சி.
R. S. வாசன் & Co கெமிஸ்ட் திருப்பூர்.
சரஸ்வதி மெடிக்கல் ஸ்டோர், நாமக்கல்.


## ஏழையின் விழா

2-ம் பக்கத் தொடர்ச்சி

தன்நிலைமை, அப்படி ஏற்பட்டு விட்டது, அதன்படி இருக்கவேண்டியதுதான், வேறு என்ன செய்வது? இது காத்தானின் மனப்போக்கு.

★

கண்ணன், காத்தானல்ல, ஏழைதான். ஆனால், அவன் பட்டைநாமக்காரன், கொட்டு முழக்குக் கேட்குமிடம் சென்று, "கோவிந்தனை" பஜிக்கிறான், "ஏழை நான், இந்த ஜென்மம் தான் இப்படி நாய்ப்பிழைப்பாகப் போய்விட்டது. அரி, பரந்தாமா! ஏதோ உன் அருளாலே அடுத்த ஜென்மத்திலாவது, இந்த வேதனையை எனக்கு வைக்காதே. ஏழையாகவே மறுபடியும் பிறக்க வைத்து இம்சைக்கு ஆளாக்காதே" என்று கடவுளைத் துதிக்கிறான் கண்ணன். ஏழை, ஆனால் அந்த ஏழ்மை, "மற்றொரு ஜென்மத்திலேனும்" போக்கடிக்கப்படவேண்டும் என்று நினைக்கிறான், அதற்குப் பக்திமார்க்கத்தை நாடுகிறான், வீதியில் திரியும் வில்லிபோல. ஏழை என்ற நினைப்பே கூட இராமலோ, காத்தான்போல ஏழையாகப் பிறந்துவிட்டோம், அதுபற்றி என்ன யோசித்து என்ன செய்வது என்று எண்ணியோ இல்லை, கண்ணன். தன் கஷ்டத்தைச், சகித்துக்கொள்கிறான், கடவுள் அடுத்தமுறையாவது தன்னை இக்கொடுஞ்சிறையில் தள்ளாமல் இருப்பார் என்று நம்புகிறான். அதற்காகவே துதிக்கிறான்.

★

சோமன், ஏழை; அதைப்போக்கிக்கொள்ளவேண்டுமென்றுதான் அவனும் எண்ணுகிறான், கண்ணனைப்போலவே. கடவுளிடம் அவனும் முறையிடுகிறான், ஆனால், அடுத்த ஜென்மம் வரையில் காத்துக்கொண்டிருக்கவேண்டும் என்ற அளவுக்கு அவன் எண்ணம் இல்லை; ஏழ்மை ஒழியவேண்டும்; இப்போதே ஒழியவேண்டும்; எப்படியாவது ஒழிந்தாக வேண்டும். படமுடியாது இனித்துயரம், நான் பட்டதெல்லாம் போதும் என்று பாடுகிறான், ஏதாவதொரு வழி கிடைக்காதா, வறுமையை ஓட்ட, என்று தேடுகிறான். கண்ணனின் கண்களிலே, சோகம்; சோமனின் கண்களிலே சோகம் இருக்கிறது, ஆனால் கொஞ்சம் சுறுசுறுப்பும் இருக்கிறது. கண்ணன், தண்டனைக்காலம் முடியட்டும், வெளிவருவோம் என்று காத்துக்கொண்டிருக்கும் கைதி; சோமன், இரும்புக்கம்பிகளைத் தொட்டுப் பார்த்தபடி, இதனை வளைத்தோ, சுவரைத் துளைத்தோ, சாளரத்திலே நுழைந்தோ, எப்படியோ ஒன்று இந்தக் காரிருள் நிறைந்த இடத்திலிருந்து வெளியேற வேண்டும் என்று துடிக்கும் கைதி, இருவரும் ஏழைதான்; கண்ணன் கூப்பிய கரத்தினன்; சோமன் சுழலும் கண்ணினன்! வழிதேடுகிறான் விடுதலைக்கு.

★

சுந்தரம், சிறு கடைக்காரன்; ஏழ்மை அவனுக்கும்; எண்ணமோ, சோமனுடையது போலத்தான், எப்படியாவது வறுமைப் பேயின் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று. ஆனால் சோமன் போல, வழி ஏதாவது கிடைக்கட்டும் என்ற அளவோடு இருந்துவிடவில்லை, நாணயமான வழி வேண்டும், நாலுபேர் கண்டால், கண்டிக்காத, கேவலப்படுத்தாத, வழியாக இருக்கவேண்டும் என்று எண்ணுகிறான். அதாவது சுந்தரம், கௌரவமான முறை வேண்டுமென்பதிலே அக்கரை கொள்கிறான். ஏழ்மைபோக வேண்டும், அதற்கோர் மார்க்கம் கிடைக்க வேண்டும், அந்த மார்க்கம், மற்றவர்கள் இழித்துப் பழித்துப் பேசக்கூடிய விதமானதாக இருக்கக்கூடாது என்பது சுந்தரத்தின் சிந்தனை. கந்தன், அப்படியில்லை, அந்த ஏழைக்கு, விடுதலைக்குவழி எப்படிப்பட்டதாக இருந்தாலும் சரி, அந்த வழியைப்பற்றி யார் என்ன கேவலமாகச் சொன்னாலும் சரி, கவலையில்லை என்பவன் கந்தன். சாக்கடையிலே கிடந்தால் என்ன, சவரன், என்று தெரிந்தால், எடுத்துக்கொள்ள வேண்டியதுதான்—என்பது கந்தன் கொள்ளும் கொள்கை.

★

"மகாப்பிரபு! மகாராஜா! புண்ணியவான்! பகவத் கடாட்சம் பெற்றவர்! பூர்வத்திலே அவர்செய்த உத்தமமான செயலுக்கு ஏற்றபடி அவருக்கு 'இலட்சுமி' சகாயம் கிடைத்திருக்கிறது! இலட்சுமி புத்ரர்! ஆண்டவனின் அருளைப் பெற்றவர்!"

ஏழை ஏகாம்பரம், பணக்காரன் முகத்திலே, பகவானின் ப்ரீதி பொறிக்கப்பட்டிருப்பதாகவே எண்ணுகிறான், சீமான் பெரிய சீலர், அசந்து மெச்சியே கடவுள் கடாட்சம் செய்திருக்கிறார், என்று புகழ்கிறான், அந்தச் சீமானைக் கண்டால், தொழுகிறான், ஆண்டவனின் அருளைப்பெற்றவர் என்ற முறையிலே. எதிர்வீட்டுச் சொக்கனும் ஏழைதான், அவன் தொழுவதில்லை, பிரபுக்களைக் கண்டவுடனே அவன் முகம் கருத்துவிடுகிறது, முணுமுணுக்கிறான், பொறாமையுடன். "நான் பகல் பனிரண்டுமணி வெயிலில் நடக்கிறேன், பாதம் கொப்பளிக்க. போகிறான் பார், மோட்டாரில்! அழுக்கு என் உடலில், அத்தர் அவன் உடையில்! தழும்புகள் என்மீது, தங்கம் அவன்மீது! தரையில் நான் உருளுகிறேன், தந்தத்தாலான கட்டிலில் அவன் உல்லாசமாகப் படுத்து உறங்குகிறான். இப்படி எல்லாம் பேசுகிறான் சொக்கன். பொறாமை, அவன் உள்ளத்திலே கூத்தாடுகிறது! வேலனுக்குவேதனை, சீமானைக்கண்டால், ஆனால் அதற்காக அழுவதுமில்லை, சொக்கன்போலப் பொறாமை கொண்டுபுழுங்குவதுமில்லை, "கிடக்கிறான்போ" என்ற முறையிலே, துடுக்குத்தனமாகவே பேசுகிறான் சீமானைப்பற்றி.

'போவுது பாருடா சீமை எருது' என்கிறான், ஒரு செல்வவானைக் கண்டால்; அதே செல்வவானை ஏகாம்பரம் கண்டு, 'ஆஜானுபாஹு அவருக்கு என்ன குறை! ஆண்டவனின் ஆசீர்வாதம் பெற்றவர்" என்று தொழுதான். சொக்கனோ, "என் உடல் எலும்புக்கூடு, அவன் உடலைப் பார் மாமிச பர்வதம்" என்றுகூறிப் பொறாமையைக்கக்கினான், வேலனோ, "போகுது பார் சீமை எருது" என்று துடுக்குத்தனமாகப் பேசுகிறான். அதிலே அவனுக்கு ஒரு திருப்தி, வறுமை தரும் வேதனையை, வேலன், இவ்விதம் பேசித்தான் கொஞ்சம் குறைத்துக்கொள்கிறான் "கப்பல் கவிழ்ந்துவிடுதுபாருடா" என்று சொல்கிறான், செல்வவானின்செல்வம் போய்விடும் என்று. அப்படிச் சொல்வதிலே ஒரு வகை ஆனந்தம் ஏற்படுகிறது வேதனை அடைந்த வேலனுக்கு. வேலன், ஒரு துஷ்டனல்ல; முட்டாள் என்பது பாலன் எண்ணம். ஏனெனில் பாலன், ஏழைதான், என்றாலும் அவன் பணக்காரரைப் பழிப்பதுமில்லை, பகைத்துக் கொள்வதுமில்லை; பகவத் கடாட்சம் பெற்றுப் பணக்காரர்களாயினர் என்று ஏமாளி போல எண்ணித்தொழுவதுமில்லை. எப்படியோ பணக்காரனாகி விட்டான்; நாம் ஏழையாக இருக்கிறோம்; கூடுமானமட்டும் முயற்சி செய்து, அவனைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும், என்பது பாலன் சிந்தனை. ஆகவே பாலன், பச்சைச் சிரிப்பு. பசப்பு வித்தை, தலையாட்டுவது முதலிய தந்திரங்களைக் கையாள்கிறான்.

"ஒரே புழுக்கம் இன்று" என்கிறார் சீமான்.

"ஆமாங்க! சுண்ணாம்புக் காளவாயிலே போட்டதுபோலிருக்கு" என்கிறான்பாலன். அப்படி ஒன்றும் புழுக்கம் இல்லை, என்பது பாலனுக்குத்தெரியும். சீமான் சொல்கிறான், ஆமாம் என்றுசொல்வதால் இலாபம் இருக்கிறது, ஒரு சமயம் கொடைக்கானல் போகத்திட்டமிடுவார்சீமான், தனக்கும் 'சான்சு' கிடைக்கும். இதனை இழந்துவிடுவானேன். ஏழையால்போகமுடியாது; ஒருபணக்காரனிடம், சமயமறிந்து தலை அசைப்பதின்மூலம், கொடைக்கானல்வாசம் கிடைக்குமானால், ஏன் அதனை இழக்கவேண்டும். இது பாலன்திட்டம். நன்றாகத்தெரியும் பாலனுக்கு, எலக்ஷனில்சீமான்கின்றால் ஜெயிக்காதுஎன்று; சீமான்சபலம் கொள்கிறார் தேர்தலில், பாலன் ஆமாம் சாமி போடுகிறான், ஆயிரம் இரண்டாயிரம் அவனுக்கு அதனால் இலாபம் இருப்பது தெரிவதால்.

★

'எப்படிசார், அறுபதரூபாயிலே, குடும்பம் நடக்குது? நாலுபிள்ளைகள், அதிலேமூத்தமகன் பத்தாவது வகுப்பு என்கிறீர்கள். எப்படி இவ்வளவு பெரியகுடும்பத்தை அந்தக் குறைச்சல்சம்பளத்தைக்கொண்டு நடத்திச்செல்ல முடிகிறது"

"எப்படியோ ஒன்று, நடத்தித்தானே ஆகவேண்டும். நாம் என்ன, பரம்பரையாப்பணக்காரக் குடும்பமாக வாழ்ந்துவந்தோமா, இப்ப ஏழ்மையைக்கண்டு பயப்பட. தரித்திரந்தான் தலைமுறைதலைமுறையாக நமதுசொத்து. எங்க அப்பன் ஹெட் கான்ஸ்டபிள். அவருக்கு நாங்க ஆறு பேர் பிறந்தோம். கஷ்டஜீவனம் தான். வாழையடி வாழை! இப்போதானா கண்டோம் ஏழ்மையை"

பலகாலமாக ஏழையாகவே இருப்பவன், இதுபோலப்பேசமுடிவதுபோல, திடீரென்று, ஏழையாகி விட்டவரால் முடியாது; உள்ளம் வெடிப்பது போலிருக்கும், அவரைத்தாக்கும் ஏழ்மை!


பாதையோரத்திலே, தான் நடந்து போகையில், தன்பழைய செருப்பு அறுந்துபோக, அதை எடுத்து வெளியே வந்துவிட்ட ஆணியைக் கல்லால்தட்டிச், செருப்பைச்செப்பனிடும்போது, இரண்டுமாதங்களுக்குமுன்பு, ஏலத்தில் போய்விட்ட தனதுமோட்டார், அதே ரோடில் போகக்கண்டால், அந்த ஏழையின் மனம் என்ன வேதனை அடையும்!

சொத்து முழுவதும் ஏலம்போய்விட்டது அவனுக்கு! வியாபாரத்தில் ஏற்பட்டகஷ்டத்தால். வேண்டுமென்றே தன்வியாபாரப்பங்காளி செய்தசூதினால் வந்தகஷ்டம் அது. பங்காளிமீது வழக்குநடத்துகிறான், சொத்து இழந்த சீமான் வக்கீல் வீட்டுக்குத்தான்போகிறான். அதே நேரத்தில்தான், அறுந்துபோன செருப்பும் கையுமாக இருக்கும்போது ஏலம்போன தன்மோட்டார் போவதைக் காண்கிறான், குமுறுகிறான், ஆனால் அந்தவேதனையைப் பிளந்துகொண்டு பாய்கிறது ஒருநம்பிக்கை. வழக்கிலே வெற்றிபெற்றுவிட்டால்! வாழ்விலே, மறுமலர்ச்சி! மறுபடியும் செல்வம்! செருப்புஅறுந்துபோனால், குப்பைமேடுபோகும், செப்பனிட வேண்டியதில்லை. இந்தநம்பிக்கை, அந்த ஏழைக்கு ஊன்றுகோல். அந்த ஊன்றுகோலுமற்று உழலும் ஏழையும் உண்டு.

ஏழ்மையின் வேதனையை உணர்ந்து, தன் போலக்கஷ்டப்படுபவர்களைக் காணநேரிடும்போது கண்ணீர்வடிக்கும் இளகியமனது படைத்த ஏழையும் உண்டு, ஏழ்மை கொட்டிக்கொட்டி, மனமே மரத்துப்போய், ஈவுஇரக்கம்காட்டாத—காட்டமுடியாத—ஏழைகளும் உண்டு.

ஏழ்மையைக் கண்டு உலகம் இகழ்கிறது, வெறுக்கிறது, என்பது தெரிந்து, தன் ஏழ்மையை மறைக்கப்பார்க்கும் ஏழையின் நிலைமை, மிக மிக வேதனை நிரம்பியது. இடிந்த வீட்டுக்கு மண்பூச்சு, கிழிந்த கோட்டுக்கு ஒட்டுவேலை, சரிந்த சுவருக்கு முட்டுக்கொடுத்தல் போன்றவைகளைச் செய்யும்போது, அந்த ஏழையின் நிலைமையைக் காண்போர் இரத்தக் கண்ணீர் விடவேண்டி நேரிடும். இருக்கும் ஏழ்மையைவிளக்கமாகப்பலர் அறியும்படி தெரிவித்து, அதன் மூலம், உலகின் கருணைதன்பக்கம் வரும் என்று எதிர்பார்த்து ஏமாற்றமடையும் ஏழைபரிதாபத்துக்குரிய சோகசித்திரம். ஏழை, பல ரகம்,

(6-ம் பக்கம் பார்க்க)

ஜெயராம்காயசுத்திலேகியத்தைச் சாப்பிடுங்கள்
தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி,
வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம்,
நடல்வாதம், இடுப்புவலி, மூலநோய்,
இவைகளைப்போக்கிமலத்தைச்சுகமாய்ப்பிரிக்கும்

**அற்புத சஞ்சீவி**

**ஜெயராம் காயசுத்தி லேகியம்**

1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2—2—0.
வி. பி. பி. வேறு.

**ஜெயராம் வைத்தியசாலை,**
28, [illegible] கும்பகோணம்.

# பிரபுக்களின் புதிய கோலம்

காவி உடையைக்கண்டு மயங்க மாட்டோம். கள்ளனும் காமுகனும் கூடத்தான் காவி அணிந்து, மக்களின் கண்களை மயக்கமுடியும். [illegible]லாக இருக்கிறார் என்பதைக் கண்டறிய, உடையை அல்ல, நரையைக்கூட அல்ல, செயலையே கவனிப்போம்.

●

சுயமரியாதைக்காரரின் இடைவிடாத பிரச்சாரத்தின் பலனாக இன்று, இந்தத்தீர்மானம் ஏற்பட்டுவிட்டது. காவி, கமண்டலம், கொண்டிருப்பவர்கள், சமர்த்தர் என்று கூற வேண்டிய நிலை பிறந்திருக்கிறது. உடையைக்கண்டு, அவர்கள் மகா உத்தமர்கள் என்று எண்ணும் ஏமாளிகளின் தொகை குறைந்துவிட்டது—இனியும் குறையும்.

●

ஆனால் புதிய ஆபத்து கிளம்பிவிட்டது. கதராடையைக்கொண்டு மக்களை மயக்கும் வித்தையில், 'பொதுமக்களின் விரோதிகள்' கைதேர்ந்தவராகிவிட்டனர். மக்களிடம், கதராடை, நாட்டுப்பற்றுக்கு, விடுதலையுணர்ச்சிக்குச்சின்னம் என்றுகூறப்பட்டுவிட்டதால், இதுபோது, மக்களைக் கசக்கிப்பிழிபவர்கள், கபட திட்டமிட்டுக்காசு குவிப்பவர்கள், சிற்றரசர்கள் சீமான்கள் ஆகியோர், கதராடை அணிந்துகொண்டு, மக்களை மயக்கித் தமதுசுயநலத்தைப் பெருக்கிக் கொள்கிறார்கள்.

●

நீறு பூசியவனைக் கண்டதும், யாரோ ஒரு சைவர் போகிறார் என்று மக்கள் எண்ணமுடியுமே தவிர, அந்தப் பூச்சுக்காரர் எவ்வளவுபேரை ஏய்த்தவன் என்பதை எப்படித் தெரிந்துகொள்ள முடியும். அதுபோலவே, இப்போது கதராடை அணிந்துகொண்டால், 'தேசபக்தர்' போகிறார் என்று மக்கள் எண்ணிக்கொள்கிறார்களே யொழிய, அந்தத் "தேசபக்தர்" தன் சுகபோகத்துக்காக, என்னென்ன திருவிளையாடல் புரிந்தார் என்பதை அறிந்துகொள்ள முடிவதில்லை. அறிந்துகொள்ளாததுமட்டுமல்ல, சிந்தனையேகூடச் செய்வதில்லை. ஆசாமி, சமுதாயத்துக்குச் செய்துவரும் நன்மை என்ன? உபயோகமான காரியம் ஏதாவது செய்கிறாரா? ஏழையின் வயிறு எரியாதபடி நடந்துகொள்கிறாரா? என்ற இவைபற்றிசிந்திக்கவேகூட முடிவதில்லை, கதராடை கண்டதும்! அதுமட்டுமா இல்லை! அவர்கூடக் கதர் உடுத்திக் கொண்டிருக்கிறார்! அவர் சிறந்ததேசபக்தர் என்று புகழுரை செய்கிறார்கள். இந்தப் புகழ்ச்சி, வெறும் முகஸ்துதியாக, இருந்து தொலைந்தால் கேடுஇல்லை. இதனைக் கொண்டு, "நல்லபெயரைப்" பெற்றுக்கொண்டு, நயவஞ்சகர்கள், தங்கள் சுயநலத்தைத் தங்குதடையின்றி, கேள்வி எதிர்ப்பின்றி, நடத்திக்கொள்ளமுடிகிறது! அதனால், சமுதாயத்திலே, அத்தகையவர்களின் சுயநலகாரியத்துக்கு, மக்கள் தாங்களாகவே பலியாகிறார்கள். பசுத்தோல் போர்த்தபுலி, என்பது பழமொழி; கதருடை அணிந்த கபடர்கள் புதுமொழியாகிவிட்டது.

●

சுயநல வாழ்வுக்கு இதுமிகச் சுலபமான வழியாகிவிட்டது. சிற்றரசர்கள், சீமான்கள், ஜெமீன்தாரர்கள், பெரிய முதலாளிகள் ஆகியோர், செல்வத்தைக் குவித்து வைத்துக்கொண்டு உள்ளனர், என்பதும், கோடானு கோடியான ஏழைமக்கள் வாழ வழியின்றித் திகைக்கிறார்கள் என்பதும், கண்கூடு. குவிந்து கிடக்கும் செல்வம், பாவினால், பலர் படும் கஷ்டம் ஒழியும் என்பது மந்தமதியினனுக்கும் விளங்கக்கூடியசாதாரண உண்மை. மேலால் கொஞ்சம் சிந்தனைக்கு வேலை தந்தால், சில இடங்களிலே செல்வம் குவிந்திருப்பதன் காரணமே, பலரிடம் ஏழ்மை இருப்பதால்தான்; பலர்ஏழ்மையாகஇருப்பது சிலரிடம் செல்வம் பதுங்கிக்கொண்டதால்தான், ஒன்று மற்றொன்றுக்குக்காரணம், என்பதைத் தெரிந்துகொள்ளலாம். அந்த உண்மையைத் தெரிந்தகொண்ட பிறகு, திகைப்படையாமல், மேலும் சிந்தித்தால், இந்தமுறையையேமாற்ற முடியும் என்ற நம்பிக்கை பிறக்கும். நம்பிக்கை, ஆர்வத்தைத்தந்தால், இதுபற்றி, மக்களிடம் எடுத்துக்கூறும் துணிவு ஏற்படும். அப்போது, சீமான்களின் பட்டுப்பட்டாடை, சிங்காரவாழ்வு, ஆகியவை பற்றி, எடுத்துக்கூறுவர், மக்களும் புரிந்துகொள்வர். இப்போது, அந்தச்சீமான்கள் 'கதராடை' அணிந்துகொண்டதால், கண்டுபிடிக்கமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. நம்மோடு அவரும் ஒருவர்! அவரும் தேசபக்தர்! அவரும் கதராடைக்காரர்! என்று ஏழைகளே ஏமாந்துபோய் எத்தர்களைப் புகழத் தொடங்கி, அவர் தம் சுயநலவாழ்வுக்குத் தாமாகவே பலியாகிறார்கள். ஒரு காலத்தில், மதப்பூச்சுக்கவசம் அளித்தது, அந்தக்கவசத்தின் வலிவு கெட்டுவிட்டது, தன்மான இயக்கத்தின் தாக்குதலால். இப்போது, கதர், சுயமான கவசமாகிவிட்டது.

●

கள்ளிக்கோட்டைராஜா, தமது சகாக்களான சீமான்களுக்கு ஒரு உபதேசம் செய்திருக்கிறார் சென்ற கிழமை.

"மகாத்மாகாந்தி, மௌலானா அசாத், சர்தார்படேல், ராஜேந்திர பிரசாத் ஆகியோரைக்கண்டு ஜெமீன்தாரி முறையின் எதிர்கால சம்பந்தமாகப் பேசினேன். தேச விடுதலையாளர்களுடன் கூடிக்கொண்டால், ஜெமீன்தாரர்கள், எதிர்காலத்தில் என்னநேரிடுமோ என்று அஞ்ச வேண்டியதில்லை. நமது கோரிக்கைகளின் நியாயத் தன்மையைக் காங்கிரஸ்தலைவர்கள் உணருகிறார்கள். காலாகாலமாக இருந்துவரும், எந்தச்சமுதாய அமைப்பு முறையையும், நீக்குவதை மகாத்மா எதிர்க்கிறார், ஜெமீன்தார்களே! காங்கிரஸ் தலைவர்களின் உதவியை நாடுங்கள்" என்றுகூறுகிறார். "இந்து" ஏப்ரல் 27ந்தேதி இதழில், கள்ளிக்கோட்டை ராஜா விடுத்துள்ள அறிக்கையைக்காணவும். கதராடையைப் போர்த்துக்கொண்டு, வாழவழி கண்டுபிடித்து விட்டார்கள், சீமான்கள். ஏற்கனவே பித்தாபுரம் ராஜகுடும்பம், சேர்ந்துவிட்டது. விஜயநகர ராஜ குடும்பம் சேர்ந்துவிட்டது. இராமநாதபுரம் ராஜா, காங்கிரசால் ஆதரிக்கப்பட்டார் தேர்தலில். செட்டிநாட்டுச் சீமான் குமாரராஜாவுக்குப் போட்டி இல்லைகாங்கிரசிடமிருந்து. ஜெமீன்தாரர்கள், தங்கள் ஜரிகைக் குல்லாய்களை வீசிஎறிந்துவிட்டுக் கதர் அணிந்து கொண்டனர், உடனே அவர்களிடம், நாட்டுச் செல்வம் குவிந்துகிடப்பதையும், அவர்களின் கீழ் ஆயிரக்கணக்கான ஏழைகள் உழைத்துவருவதையும், மக்கள்மறந்துபோய், அவர்களைத் தேசபக்தர் என்றுபுகழத்தொடங்கி விட்டனர். சமுதாயத்திலே, வறுமை தாண்டவமாடுவதற்குக் காரணமே இத்தகைய முதலாளிகள், பணமூட்டைகளைச் சேகரித்துக் குவித்துக்கொள்வதனால்தான் என்பதையும் மறந்துபோய், ஆடையைக்கண்டுமயங்கித்தமது அடிமை வாழ்வுக்குத் தாங்களாகவே அட்சதை போட்டுக்கொள்கிறார்கள்.


●

நிலமுறை இங்கு இன்றுள்ள விதம், எப்படிப்பட்டது என்பதை அனைவரும் அறிவர். இன்றும் ஜெமீன்தாரனின் ஆட்சிக்கு அடங்கித்தான் ஏழை உழவன் வாழமுடியும். புளிய மிலாறு இன்றும் இருக்கிறது. உழைத்துக் குவித்துவிட்டு, ஜெமீன்தாரன் கொடுப்பதைக் கும்பிட்டுப்பெற்றுக்கொண்டுதான் அந்தவிவசாயிகள் வதைகிறார்கள். ஜெமீன்தாரிமுறையினால் நேரிடும் குறைகள், கொடுமைகள், அனைவருக்கும் தெரியும். ஆனால், அந்த ஜெமீன்தாரிமுறை இன்று நேற்று ஏற்பட்டதல்ல; பல காலமாக இருந்துவருகிறது; பழையகாலவற்பாடு பாழாக்கக் கூடாது என்பது காந்தியாரின் கருத்து, ஆகவே அவருடைய கட்சியை அடுத்துப்பிழைக்கவேண்டும் என்று கள்ளிக்கோட்டை ராஜா கூறிவிட்டார். கதர்க்கடைக்கு வழி காட்டுகிறார்; மக்களை ஏய்க்கும் மார்க்கம், கூறுகிறார் அந்த மகானுபாவர். கொண்டா வெங்கடப்பய்யாவும் ஆந்திரக் காங்கிரஸ் தலைவரோ, ஜெமீன்தாரர்களை அர்ச்சித்து ஆராதனையே செய்கிறார். "நமது ஆந்திர தேச ஜெமீன்தாரர்கள், கருணை நிரம்பியவர்கள், கல்விக்காகவும் வேறுபல நற்காரியங்களுக்காகவும் தானதர்மம் செய்கிறார்கள்; தேசபக்தர்களாகவும் உள்ளனர்," என்று கொண்டா கொண்டாடுகிறார். அந்தந்த ஜெமீனில், பட்டினி கிடக்கும் மக்களைக் கேட்டால் தெரியும் ஜெமீன் முறையின் இலட்சணம். ஆந்திர வியாபாரச்சபையின் கூட்டத்திலே, கொண்டா ஜெமீன்தாரரைப் பாராட்டிப் பேசினார், ஜூலை 21-ந்தேதி மெயிலில் செய்தியைக் காணலாம். அந்தக் கூட்டத்துக்குத் தலைமை பூண்டவர் வேறு யாருமில்லை, ஆந்திர கேசரி பிரகாசம்! கேசரி, ஜெமீன் காட்டுக்குள் நுழையப் பயப்படும் என்றே தோன்றுகிறது. அவரும், ஜெமீன்தாரர்கள், தற்போது, பொதுமக்களின் இயக்கத்திலே பங்கெடுத்துக்கொள்கிறார்கள் என்று கூறிப் பூரித்தாராம். ஆகவே எந்தஜெமீன்தாரி முறையினால் கிராமமக்கள் ஏழ்மையில் உழல்கிறார்களோ, அந்த ஜெமீன் முறைக்குக் காந்தியாரின் ஆசியும் பிரகாசத்தின் ஆதரவும் கிடைத்து விட்டது. ஜெமீன்முறையினால் ஏற்படும் கேடு, கஷ்டம், மக்களுக்கு உண்டாகும் அவதி, எதையும் மக்களே கவனிக்கமுடியாதபடி, பெரியகதர்ச்சால்வையை அவர்கள் போர்த்துக் கொண்டு, தேசபக்தர்கள் கோலத்திலே உலாவுகிறார்கள். ஏழை, இந்தச் சூதை உணரும் நாள் என்று வரும்! உழவனின் வாழ்வு நிலை உயரவேண்டுமானால், ஜெமீன் முறை ஒழிந்தாக வேண்டும். ஜெமீன்தாரர்களோ, இப்போது கதராடையில் உலவுவதால் தேசபக்தர்கள் என்றுஅழைக்கப்படுகிறார்கள். தேசபக்தர்களை, எதிர்க்க மனம் வருமா, காங்கிரஸ் பிரசாரத்திலே மூழ்கியமக்களுக்கு? வராது! ஆகவே, அவதிப்படத்தான் வேண்டும், அன்னை பாரத மாதாமீது பாரத்தைப் போட்டுவிட்டு!!

பிரபுக்கள், மதவேடமிட்டுப் புரோகிதர்களுடன் கூடிக்கொண்டு ஏழைகளைச் சுரண்டிக் கொழுத்தனர். அறிவுக்கதிர் பரவவே, மதமுலாம் வெளுத்து விட்டது; அம்முறைபயனற்றது தெரியவே, இப்போது பிரபுக்கள், புதியகோலம் எடுத்துள்ளனர்—தேசபக்தர்கள் என்ற உருவிலே உலவுகிறார்கள். உழைப்பாளர் உலகு இதனை உணருமா?

தந்தி:- "பருமார்க்" திருச்சி.




**புரோகித ஆட்சியை ஒழி ; புதியதோர் உலகு செய்**

Edited Printed and Published by C. N. Annadurai, M.A., at "Dravida Nadu" Press, 317-319 Hodgsonpet, Conjeeveram.